


# தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும் – 6

முனைவர் ஜெ. காவேரி







9 788198 681232

# தமிழர் மரபு - தமிழரும்

# தொழில்நுட்பமும் - 6

முனைவர் ஜெ. காவேரி

# Title Verso

**TITLE OF THE BOOK: Tamil Heritage - Tamils and Technology - 6**

**புத்தகத்தலைப்பு : தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும் - 6**

| | | |
|---|---|---|
| **EDITORS** | **:** | **Dr. J. Kaveri** |
| **தொகுப்பாசிரியர்** | **:** | **முனைவர் ஜெ. காவேரி** |
| **FIRST EDITION** | : | **June** 2025 |
| **முதல் பதிப்பு** | : | **ஜீன்** 2025 |
| **PAGES / பக்கங்கள்** | : | 122 |
| **PRICE/ விலை** | : | 350 |
| **ISBN NUMBER** | : | 978-81-986812-3-2 |

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Rear side,
Virudhunagar – 626001.
Tamil Nadu

**பதிப்புரிமை** / **Copyright © 2025 – கட்டுரையாளர்களுக்கு / Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# முன்னுரை

**தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும் - 6** எனும் புத்தகம் தமிழ் மக்களின் வளமான கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் அவர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு ஆகியவற்றை ஆராய்வதாகும். இத்தலைப்பு நமது பெருமை மிகு அண்ணா பல்கலைக்கழகம் தமிழுக்காக முதலாம் ஆண்டில் இரு பாடத்திட்டத்தைப் பொறியியல் கல்லூரிகளில் இணைத்து இருப்பதற்குத் துணைசெய்யும் விதமாகச் சிறந்த கட்டுரைகளை உருவாக்க உருவானதாகும். இந்த தொகுப்பு தமிழ்ச் சமூகத்தின் குறிப்பிடத்தக்கச் சாதனைகளைக் கொண்டாடுவது மட்டுமல்லாமல், அவர்களின் நெகிழ்ச்சி, படைப்பாற்றல் மற்றும் அசைக்க முடியாத மனப்பான்மைக்குச் சான்றாகவும் விளங்குகிறது.

இந்தியாவின் தென்மாநிலமான தமிழ்நாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செழித்து வளர்ந்த துடிப்பான நாகரிகங்களின் தொட்டிலாக உள்ளது. பழங்காலத்திலிருந்தே ஒரு வரலாற்றைக் கொண்டு தமிழர்கள் பல்வேறு களங்களில், குறிப்பாகத் தொழில்நுட்ப உலகில் அழியாத முத்திரைகளைப் பதித்துள்ளனர். தசம அமைப்பின் கண்டுபிடிப்பு முதல் மருத்துவ அறிவியல் மற்றும் வானியல் பங்களிப்புகள் வரை தமிழ் அறிஞர்கள், இன்று நாம் வாழும்

உலகை வடிவமைக்கும் முன்னோடி முன்னேற்றங்களில் முன்னணியில் உள்ளனர். இந்த புத்தகத்தின் மூலம் பிரபஞ்சத்தின் மர்மங்களை அவிழ்க்க தங்கள் அறிவாற்றலையும் ஆர்வத் தன்மையையும் பயன்படுத்திய தமிழ் முன்னோர்களின் அடிச்சுவடுகளைத் தேடி, காலத்தின் மூலம் ஒரு குறிப்பிடத்தக்கப் பயணத்தைத் தொடங்குகிறோம்.

பண்டைய தமிழ் பொறியியல் மற்றும் கட்டிடக் கலையின் நுணுக்கங்களை வெளிப்படுத்தும் அற்புதமான சோழர் கோவில்களில் இருந்து, சங்க காலத்தின் கணித புத்திசாலித்தனம் வரை, அறிவார்ந்த ரீதியாக அழகாக இருப்பது போல் ஒரு பாரம்பரியத்தை நாம் காண்கிறோம். இந்நூலின் அத்தியாயங்களை ஆழமாகப் படிக்கும்போது, பல்வேறு துறைகளில் பங்களிப்புச் செய்த தமிழர்களின் வியக்க வைக்கும் தொழில்நுட்பப் புத்திசாலித்தனத்தைக் கண்டறிய முடிகிறது.

விவசாய நிலப்பரப்பை மாற்றியமைத்த நீர்ப்பாசன முறைகளின் வளர்ச்சியிலிருந்து ஜவுளி, உலோகம் மற்றும் இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்கச் சாதனைகள் வரை, தமிழ் மக்கள் தொழில்நுட்ப வரலாற்றில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளனர். மேலும், இந்நூல் தமிழர்களின் கடந்தகாலப் பெருமைகளை மட்டும் மையப்படுத்தாமல், உலகெங்கிலும் உள்ள துடிப்பான மற்றும் ஆற்றல்மிக்க தமிழ்ச் சமூகத்தின் இன்றைய சாதனைகளையும் எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்நாட்டின் பரபரப்பான தகவல் தொழில்நுட்ப மையங்கள் வரை, தமிழ் மனங்கள் மீண்டும் எல்லைகளைத் தள்ளி 21ஆம் நூற்றாண்டின் தொழில்நுட்ப நிலப்பரப்பை வடிவமைக்கும் நவீன தொழில்நுட்பத்தின் பகுதிகளுக்குள் நாம் நுழைகிறோம்.

தமிழ் பாரம்பரியத்தின் இந்த பொக்கிஷத்தைக் கட்டமைத்த கட்டுரை ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் முயற்சி பாராட்டுக்குரியது. தமிழ் தொழில்நுட்பத்தின் ஆற்றலை எடுத்துரைப்பதில் அவர்களின் ஆர்வமும் அர்ப்பணிப்பும் இந்தக் கட்டுரைகளின் விரிவான ஆய்வுகளில் தெளிவாகத் தெரிகிறது.

**தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும் - 6** எனும் இப்புத்தகம் கடந்த காலத்திற்கான அடையாளம் மட்டுமல்ல, எதிர்கால சந்ததியினர் தங்கள் கலாச்சாரப் பாரம்பரியத்தைத் தழுவி, நாளைய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை வடிவமைப்பதில் தொடர்ந்து பாடுபடுவதற்கான அழைப்பு. இந்நூல் தமிழ் பாரம்பரியத்தின் மீதான பெருமையை மீண்டும் எழுப்பும். மேலும், இப்புத்தகத்தின் அனைத்துக் கட்டுரைகளும் நாட்டின் தோற்றம் எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு கலாச்சாரமும் தொழில்நுட்ப உலகிற்கு மதிப்புமிக்க பங்களிப்பை வழங்குகிறது என்பதை நினைவூட்டுவதாக அமையும்.

**தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும் - 6** எனும் இப்புத்தகம் அனைவருக்கும் வழிகாட்டும் ஒளியாக விளங்கும். நமது பாரம்பரியத்தில் உள்ள செழுமையையும் புத்திசாலித் தனத்தையும் நினைவூட்டும். மேலும், தமிழ் மக்களின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும் கொண்டாடவும் என்றென்றும் நம்மை ஊக்குவிக்கும். அதன் பொருட்டு இந்த தொடர்வரிசைப் புத்தகப் படைப்பின் முதல் புத்தகத்தை உங்களுக்கு அளிப்பதில் பெருமிதம் அடைகிறோம்.

**மகேஸ்வரி பதிப்பகம்**

## செங்காந்தள் புத்தகப் பகுதி

## Editorial Board / ஆசிரியர் குழு


**முனைவர் P. சுவாதி**

காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி

கே.வெள்ளகுளம்-625 701,

விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் P. ஜெயசங்கர்,**

தமிழ் உதவிப் பேராசிரியர்,

என் பி ஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி

(தன்னாட்சி)

என்பிஆர் நகர், நத்தம், திண்டுக்கல்.

**முனைவர் K.S. புனிதவதி,**

உதவி பேராசிரியர், தமிழ் துறை,

ஸ்ரீ மணக்குள விநாயகர் பொறியியல் கல்லூரி,

மதகடிப்பேட்டை, புதுச்சேரி.

**முனைவர் த. மகேஸ்வரி,**

பாண்டியன் கல்வி அறக்கட்டளை,

விருதுநகர் – 626001. தமிழ்நாடு, இந்தியா.

**ச. கலைவாணி**

தமிழ்ப் பயிற்றுநர்,

அண்ணா பல்கலைக்கழகம் மண்டல வளாகம்,

கோயம்புத்தூர்.

**த. அருள்ஜோதி.**
தமிழ் உதவிப் பேராசிரியர்,
ஸ்ரீ சாய் ரங்கநாதன் பொறியியல் கல்லூரி
தொண்டாமுத்தூர் (வழி), கோயம்புத்தூர் - 641109.

**த. பிரகாஷ்,**
தமிழ் உதவிப் பேராசிரியர்
பூ சா கோ தொழில்நுட்பம் மற்றும் பயன்சார் ஆராய்ச்சிக் கல்லூரி,
கோயம்புத்தூர்.

**ஆசிரியர் குழு பணி விவரம்**

இந்த குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

**Editorial Work Flow Details**

This Editorial committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

# மதிப்புரை

து. சாந்தாலெட்சுமி அவர்கள் "**சங்க இலக்கியங்களில் ஜோதிடப் பதிவுகள்**" எனும் ஆய்வுக்கட்டுரையில் சங்க இலக்கியங்களில் காணப்படும் ஜோதிடக் குறிப்புகளை ஆய்வு செய்துள்ளார். நட்சத்திரங்கள், கோள்கள் மற்றும் நிமித்தங்களின் சமூக-பொருளாதாரத் தாக்கங்களை இலக்கிய ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். சங்ககால மக்களின் வானியல் அறிவு மற்றும் ஜோதிட நம்பிக்கைகளை முழுமையாக ஆய்வு செய்து, பண்டைய தமிழரின் அறிவியல் சிந்தனை பற்றிய புதிய விளக்கங்களைத் தந்துள்ளார்.

முனைவர் பா. தமிழரசி அவர்கள் "**திருக்குறளில் மேலாண்மைக் கோட்பாடுகள்**" எனும் கட்டுரையில் திருக்குறளில் காணப்படும் மேலாண்மைக் கோட்பாடுகளை நவீன மேலாண்மைக் கோட்பாடுகளுடன் ஒப்பீடு செய்து ஆய்வு மேற்கொண்டுள்ளார். அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக மேலாண்மை போன்ற துறைகளில் திருக்குறள் வழங்கும் கருத்துகளை ஆதாரபூர்வமாக விளக்கியுள்ளார்.

முனைவர் கி. நாகேந்திரன் அவர்கள் "**தமிழ் இலக்கியத்தில் முருகப் பெருமான்**" எனும் கட்டுரையில் சங்க இலக்கியம் முதல் பக்தி இலக்கியம் வரை முருகன் குறித்த இலக்கியக் குறிப்புகளை ஆராய்ந்துள்ளார். முருகனின் புகழைப் போற்றும் இலக்கியம், பல்வேறு திணைகளில் அவரது தத்துவம் மற்றும் சமூக-சமயப் பங்கு ஆகியவற்றை ஆய்வு

செய்துள்ளார். இந்த ஆய்வு, தமிழர் சமயத்தில் முருக வழிபாட்டின் தொடர்ச்சியைத் தெளிவுபடுத்துகிறது.

முனைவர் கா. பிரேமா அவர்கள் "**தற்காப்புக் கலை வளரி**" எனும் கட்டுரையில் தமிழரின் பாரம்பரிய தற்காப்புக் கலையான வளரி பற்றிய வரலாற்றையும் சமூகப் பின்னணியையும் ஆய்வு செய்துள்ளார். மதுரை வட்டாரத்தில் பழந்தமிழர் போர் முறைகள் மற்றும் தமிழ்குடிகள் பயன்படுத்திய இக்கலைகளின் நுணுக்கங்களைப் புகைப்பட ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். இக்கட்டுரை பண்டைய தமிழரின் வீரச் செல்வாக்கைப் பற்றிய புதிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

வெ. மாரிச்செல்வி அவர்கள் "**ஆற்றுப்படை இலக்கியம் காட்டும் நிலவியல் கோட்பாட்டில் திணைசார் உணவியல் முறைமை**" எனும் ஆய்வுக்கட்டுரையில் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் திணைசார் உணவுமுறைகள் மற்றும் நிலவியல் பழக்கவழக்கங்களை ஆராய்ந்துள்ளார். ஐந்திணைகளின் உணவுப் பழக்கவழக்கங்கள், வணிகத் தொடர்புகள் மற்றும் பொருளாதார முறைகளை இலக்கிய ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். இந்த ஆய்வு பண்டைய தமிழரின் சூழலியல் அறிவு மற்றும் பொருளாதார நுட்பங்கள் பற்றிய புரிதலை எதிர்கால ஆய்வாளர்களுக்கு அளிக்கிறது.

**முனைவர் ஜெ. காவேரி**

# உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | சங்க இலக்கியங்களில் ஜோதிடப் பதிவுகள்<br>து. சாந்தாலெட்சுமி | 1 - 28 |
| 2. | திருக்குறளில் மேலாண்மைக் கோட்பாடுகள்<br>முனைவர் பா. தமிழரசி | 29 - 55 |
| 3. | தமிழ் இலக்கியத்தில் முருகப் பெருமான்<br>முனைவர் கி. நாகேந்திரன் | 56 - 65 |
| 4. | தற்காப்புக் கலை வளரி<br>முனைவர் கா. பிரேமா | 66 - 88 |
| 5. | ஆற்றுப்படை இலக்கியம் காட்டும் நிலவியல் கோட்பாட்டில் திணைசார் உணவியல் முறைமை<br>வெ. மாரிச்செல்வி<br>முனைவர். அ. விஜயலட்சுமி | 89 - 122 |

# சங்க இலக்கியங்களில் ஜோதிடப் பதிவுகள்

**து. சாந்தாலெட்சுமி,** தமிழ் உதவிப்பேராசிரியர், வ. உ. சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

ஜோதிடம் என்பது வானியல் ரீதியாக கோள்களின் நகர்வுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால நகர்வுகளைக் கூறுவது ஆகும். பண்டையத் தமிழரின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையதாக ஜோதிடக்கலை இருந்துள்ளதை சங்க இலக்கியப் பாடல்கள் காட்டுகின்றன. குறி பற்றியும் கோள் விண்மீன் முதலான வானியல் செய்திகள் பற்றியும் இலக்கியங்களில் பரவலாக கூறப்பட்டுள்ளதை சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

## ஜோதிடர்

மனிதர்களின் நிகழ்கால எதிர்கால வாழ்க்கையில் நிகழக்கூடிய நன்மை தீமைகளை ஆராய்ந்து அறியும் ஆற்றல் படைத்தவர்களை ஜோதிடர் என்பர். பண்டையத் தமிழ் இலக்கியங்களில், ஜோதிடம், ஜோதிடர் என்ற வார்த்தைகள் இல்லை. மாறாக கணியம், கணியன் என்ற சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஜோதிடர்களை நிமித்திகன், கணிகன், காலக்கணக்கன் என்று அழைத்து இருப்பதை இலக்கியங்களில் காணலாம். "யாதும் ஊரே

 ISBN Number: 978-81-986812-3-2

யாவரும் கேளீர்" என்று பாடிய சங்ககாலப் புலவர் கணிகன் பூங்குன்றனாரின் பெயரிலே கணிகன் என்ற சொல் அமைந்திருப்பை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்கள் வாயிலாக பழந்தமிழரின் வாழ்வியல் செய்திகள், பண்பாட்டுக்கூறுகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றை அறிந்து கொள்கிறோம். பண்டையத் தமிழர்கள் தங்களது அகவாழ்க்கை மற்றும் புறவாழ்க்கை இரண்டிலும் சிறப்புற்று வாழ்ந்திருந்ததை அறிய முடிகிறது. தங்களது வாழ்வில் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நிகழக் கூடிய நன்மை தீமைகளை அறியும் ஜோதிட முறைகளையும் அறிந்து இருந்து இருக்கின்றனர் என்பதை தமிழ் இலங்கியங்கள் வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**நிமித்தம்**

நிமித்தம் என்பது பின்னர் நிகழும் நன்மை தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறி என்பர். இதனை சகுனம் என்றும் கூறுவர். குறி சொல்பவரை நிமித்திகன் என்று சொல்லப்பட்டதை சங்க இலக்கியங்களில் காணலாம். நிமித்தங்களில் நன்னிமித்தம், தீநிமித்தங்கள் குறித்தும் சொல்லப்பட்டு உள்ளன. நற்செயலையும் நற்பயனையும் அறிவிக்கும் குறியினை நன்னிமித்தம் என்றும் தீயச்செயலையும் தீமையையும் அறிவிக்கும் குறியினைத் தீநிமித்தம் என்றும் கருதினர். சுவரில் உள்ள

 **ISBN Number: 978-81-986812-3-2**

பல்லியின் ஒலி, குயிலின் கூவல், குருகுகள் விசும்பில் எழுந்து பறத்தல், வண்டுகள் புதரில் சூழ்தல், ஊதுதல், முன்கை வளையும், இடக்கண் துடித்தல், ஆயரது குழல் ஒலி இவையெல்லாம் நன்னிமித்தங்களாக கருதப்பட்டன.

எட்டுத் திசைகளிலும் எரிமீன் விழுதல், பச்சை மரம் பற்றி எறிதல், சூரியன் விழுங்கல், அச்சம் தரும் பறவைகள் ஒலித்தல், பல் நிலத்தில் விழுதல், தலையில் எண்ணெய் தேய்த்துக்குளித்தல், யானை அடங்காமை, மேலாடை கீழ விழுதல், அரியணை கவிழ்தல் போன்ற கனவுகள் தீமை நிகழ்வதை குறிக்கும் என்பதை,

**திசை இரு நான்கும் உற்கம் உற்கவும்,**
**பெரு மரத்து, இலை இல்நெடுங்கோடு வற்றல் பற்றவும்**
**வெங்கதிர்க் கனலி துற்றவும், பிறவும்**
**அஞ்சுவரத் தகுந புள்ளுக் குரல் இயம்பவும்**
**எயிறு நிலத்து வீழவும், எண்ணெய் ஆடவும்.**
**களிறு மல் கொள்ளவும், காழகம் நீப்பவும்**
**வெள்ளி நோன் படை கட்டிலொடு கவிழவும்**
**கனவின் அரியன காணா… (புறம் 41: 4-11)**

என்ற புறநானூற்று பாடல் அடிகள் தெளிவுருத்துகின்றன.

**புள் நிமித்தம்**

பறவைகளின் ஒலிப்பு முறையில் நிமித்தம் பார்த்தனர். நிமித்தம் குறித்து தொல்காப்பியத்தில்


**ISBN Number: 978-81-986812-3-2**

**நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும் (தொல். 1037)**

எனக் கூறப்பட்டுள்ளது.

பரிசில் பெற சென்ற புலவரும் கூத்தரும் நிமித்தம் பார்த்து புறப்பட்டனர் என்பதை,

**புலரி விடியல் புள் ஓர்த்துக் கழிமின்**

**(மலைபடுகடாம் - 448)**

என்ற மலைபடுகடாமின் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இரவின் நடுவானத்தில் தும்பி ஒலித்தலும், வீட்டில் வைத்த விளக்கு எரியாது அணைதலும் தீய நிமித்தம் என்பதை,

**நடுநாள் வந்து தும்பியும் வேட்கும்**

**நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா (புறம். 280: 2-3)**

என்ற பாடலடிகள் வாயிலாக அறியமுடிகிறது. ஆந்தை அலறினால் தீயது நடக்கும் என்று மக்கள் நம்பியதாக எடுத்துரைக்கிறது புறநானூற்று பாடல் வரிகள்,

**அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும் (புறம் 280)**

பறவைகளின் செயல்கள் மூலமாக நிமித்தம் பார்க்கப்பட்டதை புறநானூறு கூறுகிறது.

**நாளன்று போகிப் புள்ளிடைத் தட்ப**

**பதனன்று புக்குத் திறனன்று மொழியினும் (புறம் 124)**


**ISBN Number: 978-81-986812-3-2**

பறவை ஒலி வைத்து சகுனம் கூறிய நிமித்திகனுக்கு ஆன்களைச் சிறப்பாக வழங்கியதை புறப்பொருள் வெண்பாமாலையில் பிள்ளை வழக்கு என்னும் துறை எடுத்துரைக்கிறது.

**பொய்யாது புள்மொழிந்தார்க்கு**
**வையாது வழக்குரைத்தன்று (புறப்பொருள்**
**வெண்பாமாலை: 1: 17)**

பகைவரின் ஆனிரையைக் கைப்பற்றக் கருதி பறவையின் ஒலி வைத்து நிமித்தம் கூறிய நிமித்திகனுக்கு மிக்க மடியினையுடைய ஓர் ஆன் ஒரு குடம் பால் கறக்கும் என்று சுட்டப்படும் நான்கு ஆன்களை இனந்தோறும் கொடுத்த செய்தி புறப்பொருள் வெண்பா மாலையில் கூறப்பட்டுள்ளது.

**புல்லார் நிரை கருதி யாச்செல்லப் புள்நலம்**
**பல்லார் அறியப் பகர்ந்தார்க்குச் - சொல்லாற்**
**கடஞ்சுட்ட வேண்டா கடுஞ்சுரையா னான்கு**
**குடஞ்சுட் டினத்தாற் கொடு (புறப்பொருள்**
**வெண்பா மாலை)**

**பல்லிநிமித்தம்**

பல்லி ஒலித்தலைச் சகுனமாகக் கருதுவது சங்க காலந்தொட்டு இன்றுவரை இருந்து வருகிறது. பல்லி ஒலிக்கும் இடத்தை வைத்து அவை நல்ல நிமித்தமா, தீய நிமித்தமா என்பதை கணித்தனர்.

 **ISBN Number: 978-81-986812-3-2**

**...பல் மாண்**

**ஓங்கிய நல் இல் ஒருசிறை நிலைஇப்**

**பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்**

**கன்றுபுகு மாலை நின்றோள் எய்தி (அகம். 9: 17-20)**

என்ற அகநானூற்றுப் பாடலில் தலைவனின் வருகையை எதிர்பார்த்து தலைவி வீட்டின் ஒரு மூலையில் நின்று கொண்டு பல்லி ஒலி கேட்கும் போதெல்லாம் அதனை வணங்கி போற்றிக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்டு உள்ளது.

பொருள்வயிற் பிரிந்த தலைவன் பாலை வழி சென்றான். அவன் பாலைக் கொடுமையைக் கண்டு பொருளாசை விடுத்துத் திரும்பி வந்துவிடுவான் என எண்ணுகிறாள். அப்பொழுது பல்லி ஒலி எழுப்பும் ஓசை கேட்கிறது. இதை நல்ல சகுனமாக எண்ணி தலைவன் திரும்பி வந்துவிடுவான் என்ற மகிழ்ச்சியுற்ற செய்தியை பாலைக்கலி பாடல்வரிகள் தெளிவுறுத்துகின்றன.

**பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன**

**நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே**

**(பாலைக்கலி. 11)**

**கண் துடித்தல்**

கண் துடிப்பு எதிர்காலப் பலன்களை அறிவிப்பதாக நம்புகின்றனர். பெண்களுக்கு இடதுகண்


**ISBN Number: 978-81-986812-3-2**

துடித்தால் நல்லது நடக்கும் என்றும், வலதுகண் துடித்தால் தீமை நிகழும் என்றும், ஆண்களுக்கு வலதுகண் துடித்தால் நல்லது நடக்கும் என்றும், இடதுகண் துடித்தால் தீமை நிகழும் என்றும் நம்பினர். இதனை கம்பராமாயணம் சுந்தரகாண்டத்திலும் கூறப்பட்டுள்ளது.

**பொலந்துடி மருங்குவாய் புருவம் கணிமுதல்**
**வலந்துடிக்கின்ற வருவது ஓர்கிலேன் (கம்ப.**
**சுந்தரகாண்டம்: 31)**

பொருள் தேடிப் பிரிந்து சென்ற தலைவனின் வரவை தலைவி தோழியிடம் கூறிக்கொண்டிருந்த பொழுது பல்லி சத்தமிட்டது, அவளது இடக்கண் துடித்தது நல்ல சகுனம் என்பதை விளக்கும் பாடல்

**நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே**
**(பாலைக்கலி. 11)**

சிலப்பதிகாரத்தில்,

**கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்**
**உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன**
**எண்ணுமுறை இடத்தினும் வலத்தினுந் துடித்தன.**
**(சிலம்பு: 237-239)**

கண்ணகியின் கரிய கண்ணும் மாதவியின் சிவந்த கண்ணும் துடித்தன. கோவலன் கண்ணகியை நாடி வருவான் என்ற நல்நிமித்தமாக அவளுக்கு இடக்கண் துடித்ததாகவும், மாதவியினைக் கோவலன் பிரிய நேரும்


**ISBN Number: 978-81-986812-3-2**

என்பதால் அவளுக்கு வலக்கண் துடித்ததாகவும் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

**விரிச்சிகேட்டல்**

விரிச்சி கேட்டல் என்பது நற்சொல் கேட்டல் என்று பொருள். நல்ல சகுனங்களில் ஒன்று யாதொனுமொரு நிகழ்ச்சியின் விளைவு நன்றாய் முடியுமோ தீதாய் முடியுமோ என முன்னரே அறிய விரும்புவோர் வழக்கம் அருகிய ஓரிடத்தே சென்று தெய்வத்திற்கு நெல்லும் மலரும் தூவி தம்மொடு தொடர்பிலாத ஏதிலாளர் வாயினின்றும் வரும் சொல்லை கேட்க நிற்பர். அங்ஙனம் அவ்வேதிலாளர் வாயினின்றும் பிறந்த சொல் தங்கருத்தோடு ஒத்து நற்பொருள் உடையதாயவழி அந்நிகழ்ச்சி நன்றாய் முடியும் என்றும் தீப்பொருள் உடையதாய்த் தங்கருத்தை முரணிய வழித் தீதாய் முடியும் என்றும் துணிவர். இது பண்டைக் கால வழக்கம் என்பர். புறப்பொருள் வெண்பாமாலை வெட்சிப்படலத்தில்,

**வேண்டிய பொருளின் விளைவு நன் கறிதற்கு**
**ஈண்டிருண் மாலைச் சொல்லோர்த் தன்று**
**(பு. வெ. மாலை: 1: 3)**

என்ற கொளுவில் வெட்சியார் தாம் விரும்பிய செயலின் ஆக்கத்தினது நன்மையை உணரும் பொருட்டு செறிந்த

 **ISBN Number: 978-81-986812-3-2**

இருளையுடைய மாலைப் பொழுதின்கண் நற்சொல்லை செவியால் ஆராய்ந்ததாக சொல்லப்பட்டிருக்கின்றன.

**எழுவணி சீறூர் இருள்மாலை முன்றிற்**
**குழுவினம் கைகூப்பி நிற்பத்_தொழுவிற்**
**குடக்கணீ கொண்டுவா என்றாள் குனிவில்**
**தடக்கையாய் வென்றி தரும் (புறப்பொருள் வெண்பாமாலை/வெட்சிப் படலம்)**

என்ற பாடலில் தலைவி கூறும்பொழுது, கணையமரஞ் சூழ்ந்த சிறிய ஊர்ப்புறத்தே இருண்ட மாலைப் பொழுதில் திருக்கோயில் முற்றத்திடத்தே கூடி நின்று தெய்வத்தை கைகுவித்து வணங்கி நின்றோம். அப்பொழுது ஒரு வேட்டுவச்சி ஏணியின்கண் உள்ள குடத்துக் கள்ளை நீ எடுத்துக் கொண்டு வா என மற்றொருத்திக்குக் கூறிய நற்சொல்லைக் கேட்டோம். ஆதலால் தலைவன் மேற்கொண்டுள்ள செயல் வெற்றியைத் தரும் என கூறினாள்.

**நாழி கொண்ட நறுவீ முல்லை**
**அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது**
**பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்**
**சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்**
**உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்**
**நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய**
**கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர**

 **ISBN Number: 978-81-986812-3-2**

**இன்னே வருகுவர் தாயார் என்போன்**
**நன்னர் நன்மொழி கேட்டணம்...**
**(முல்லைப்பாட்டு: 9-17)**

என்ற முல்லைப்பாட்டின் வரிகள் மாலைப் பொழுதில் வயது முதிர்ந்த பெண்கள் முல்லைப்பூக்களையும் நாழியில் நெல்லையும் கொண்டு வந்து காவல் கொண்ட தெய்வத்தை வணங்கி நற்சொல் எதிர்பார்த்து நின்றனர். அப்பொழுது அங்கே ஆயர்மகள் இளங்கன்றுக் குட்டியைச் சிறிய தாம்புக் கயிற்றில் கட்டி வைத்திருந்தாள். அது தாய்பசுவை எண்ணித் தவித்துக் கொண்டிருந்தது. அந்தக் கன்றின் கழுத்தைத் தன் கைகளில் அணைத்துக் கொண்டு கோவலர் பின்னிருந்து ஓட்டிக்கொண்டுவர உன் தாய்ப்பசு இப்பொழுதே வந்துவிடும் என்று ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாள். இந்த நல்ல சொற்கள் அங்கிருந்த பெண்களின் காதுகளில் விழுந்தது. தாங்கள் கேட்ட நற்செய்தியை, போரின் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவனை எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்த தலைவியிடம் கூறி அவளின் துயரத்தை நீக்கியதாக முல்லைப்பாட்டின் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

பிறர் பேசும் வார்த்தைகள், பறவைகளின் ஒலி அறிந்து பலன் கண்டறிந்தனர் என்பதை தொல்காப்பியம் பதிவு செய்திருக்கிறது

 **ISBN Number: 978-81-986812-3-2**

**படை இயங்கு அரவம்**
**பாக்கத்து விரிச்சி (தொல்: 1004)**
**ஆவொட்ட நிமித்தம் கூறலும்**
**செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்**
**(தொல். பொருள்: 4: 36)**

என்ற வரிகள் தலைவன் வெளியூருக்குப் போக இருக்கிறான். அந்நேரம் பசு ஒன்று பால் நிறைய கறந்திருக்கின்ற செய்தி கிடைக்கிறது. இதனால் தலைவனுக்கு நல்லது நடக்கும் எனக் கருதி மகிழ்வுடன் விடை கொடுத்து தலைவி அனுப்பி வைத்த செய்தி தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன.

**நாழிகைக் கணக்கர்:**

மன்னர்கள் தம் அரசவையில் சோதிடர்களை நியமித்து, சிறுசிறு நிகழ்வுகளையும் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றே நிகழ்த்தியிருக்கின்றனர் என்பதை இலக்கியங்களில் காணலாம். பிழையின்றிக் காலத்தை கணிக்கும் நாழிகைக் கணக்கர் அரசனுடன் பயணித்த செய்தியை முல்லைப்பாட்டில் காணலாம்

**பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்.**
**தொழுது காண்கையர் தோன்ற வாத்தி,**
**எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்**
**குறு நீர்க் கன்னல் இனைத்து" என்று இசைப்ப**
**(முல்லை–பா: 55-58)**

 **ISBN Number: 978-81-986812-3-2**

என்ற பாடலில் பிழையின்றிக் காலத்தைக் கணிக்கும் நாழிகைக் கணக்கர் மன்னனைத் தம் கையால் தொழுது வணங்கி வாழ்த்திவிட்டு "கடல் சூழ்ந்த உலகத்தை வெல்ல வந்தரே உன்னுடைய நாழிகை வட்டிலில் சென்ற நாளிகை இதுவே காண்பாயாக!" என்று மன்னனுக்கு அறிவிக்கின்ற செய்தி முல்லைப்பாட்டில் கூறப்பட்டு உள்ளது. நாழிகை வட்டில் என்பது வட்டிலில் நீரிட்டு ஒரு சிறு துளை வழியாக அந்நீரைச் சிறிது சிறிதாகக் கசியவிட்டு அந்நீரை அளந்து காணும் கருவியாகும் என்பதை முல்லைப்பாட்டு விளக்குகிறது.

**புகழ்நுவல முக்காலமும்**
**நிகழ்பறிபவன் இயல்புரைத்தன்று**
**(புறப். வெ. மா. 8: 13)**

முக்கால நிகழ்ச்சிகளையும் உணர்ந்து கூறக் கூடியவர்கள் கணிவர்கள் என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.

**புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்**
**பரிவின்றிப் பட்டாங் கறியத் - திரிவின்றி**
**விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம்**
**கண்ணி உரைப்பான் கணி (புறப். வெ. மா.)**

தம் உடம்பைப் போற்றுமாறு தப்பு நிகழாதபடி கற்க வேண்டிய நூல்களைப் பலகாலும் போற்றிக் கற்று உலகினர் துன்பமின்றியே உண்மையை உணர்ந்து

 **ISBN Number: 978-81-986812-3-2**

கொள்ளும்படி, தப்பில்லாமல், வானமும் இந்நிலவுலகமும் உண்டாக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் கருதி கூறுபவன் சிறந்த கணியாவான் என புறப்பொருள் வெண்பாமாலை கணியான் குறித்து விளக்கம் தருகின்றன.

**துணிபுணரும் தொல்கேள்விக்**

**கணிவனது புகழ் கிளந்தன்று (புறப்.வெ.மா. 8: 20)**

காலக்கணிதனுடைய திறத்தைப் புகழ்ந்து கணிவன் முல்லை துறை பாடப்பட்டுள்ளது. அகநானூற்றில்,

**கணிவாய்ப் பல்லிய காடிறந்தோரே (அகம் 151.15)**

என்றும், நற்றிணையில்,

**காரரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கை**

**(நற். 373. 6)**

என்றும் கூறுகின்ற வரிகளில் கணி என்ற சொல் பயிலப்பட்டுள்ளதை காணலாம்.

**சித்தர் இலக்கியங்கள்**

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சித்தர்கள் மாந்தர்களுக்கு வாழும்கலை, சாகாக்கலை, சோதிடக் கலை, சித்தமருத்துவம், யோகக்கலை, அட்டமாசித்தி கைவரப் பெறல், நோயற்ற வாழ்க்கை முறை முதலான பல அரிய செய்திகளை கூறியுள்ளதை சித்த இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

தமிழகத்தில் சித்தர் பலர், பல நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்தே வாழ்ந்திருந்தாலும் முதல் சித்தர்


**ISBN Number: 978-81-986812-3-2**

அகத்தியரே. அகத்தியரிடமிருந்தே ஒரு சித்தர் மரபு தொடங்கியது எனலாம். அகத்தியர் மருத்துவம், ஞானம், நாடிசாஸ்திரம், சோதிடம், யோகம், மந்திரம் போன்ற பல துறைகளில் பல நூல்களைப் படைத்துள்ளார்.

பண்டைய காலங்களில் மருத்துவ முறையிலும் ஜோதிடம் முக்கிய அங்கமாக விளங்கி இருக்கின்றன. பஞ்சபூத தத்துவப்படியான கிரகநிலை மற்றும் கோள்களின் ஆதிக்கம் மாறும்போது உடலிலும் வாத பித்த கப மாறுபாடு அடிப்படையாகவும், உடம்பின் இன்னென்ன பகுதிகள் பாதிக்கப்படும் என்ற தத்துவத்தை அவர்கள் கணக்கிட்டு அந்த அடிப்படையில் இயற்கை மூலிகை மூலம் மருந்து தயாரிக்கப்பட்டு வைத்திய முறையைக் கையாண்டுள்ளனர்.

**பண்டைத் தமிழரின் வானியல்அறிவு**

சங்கப்புலவர்கள் இயற்கையோடு இயைந்து, இயற்கையின் நுட்பங்கள் பலவற்றையும் அறிந்து பாடியுள்ளனர். அவர்கள் வானத்து இயல்புகளையும் வானத்தில் நாள்மீன்களாலும் கோள்மீன்களாலும் நாள்தோறும் நிகழும் மாற்றங்களையும் அம்மாற்றங்களின் விளைவுகளையும் தம் நுண்ணறிவால் அறிந்து பாடியுள்ள பாடல்கள் சங்க இலங்களில் பரவலாகக் காணப்படுகின்றன.


**ISBN Number: 978-81-986812-3-2**

சங்க காலத்தில் கணியன் பூங்குன்றனார், கணிமேதாவியார் போன்ற புலவர்கள் வானியல் அறிஞர்களாக திகழ்ந்துள்ளனர். உறையூர் முதுகண்ணன் சாத்தனார், சோழன் நலங்கிள்ளியைப் பாடிய புறப்பாடலொன்றில்,

**செஞ் ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்**
**பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்**
**வளி திரிதரு திசையும்**
**வறிது நிலைஇய காயமும், என்றிவை**
**சென்றளந்து அறிந்தோர் போல... (புறம்-30)**

என்ற புறப்பாடல் மூலம் அக்காலத்தில் வானியல் அறிவு பெற்றிப்பதை அறியமுடிகிறது. கதிரவனின் பாதையும், பாதைவழி இயக்கமும் அதனைச் சூழ்ந்து பிற கோள்கள் இயங்கும் மண்டிலமும், காற்று இயங்கும் திசையும், ஓர் ஆதாரமும் இன்றி தானே நிற்கின்ற ஆகாயமும் என்று இவற்றின் அளவுகளை அளந்தறிந்தார் போல கணித்து கூறியுள்ளமை வியப்பிற்கு உரியதாகும். தொல்காப்பியத்தில்,

**மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்**
**(தொல். பொருள்.-74)**

என்று வானியல் அறிவனின் மேம்பாடு குறித்து பேசப்பட்டுள்ளது.


**ISBN Number: 978-81-986812-3-2**

**நட்சத்திரங்கள்**

அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி.

**இராசிகள்**

மேடம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுர், மகரம், கும்பம், மீனம்.

ஞாயிறு முதலான ஒன்பது கோள்கள் மற்றும் அசுவினி முதலான இருபத்தேழு நாள்மீன்கள் பற்றிய குறிப்புகளும் சிறப்புச் செய்திகளும் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. மதுரைக்காஞ்சியில் பாண்டிய வேந்தனின் செங்கோல் சிறப்பினைக் கூறும்போது,

**ஓங்கு திரை வியன் பரப்பின்**
**ஒலி முந்நீர் வரம் பாகத்**
**தேன் தூங்கும் உயர் சிமைய**
**மலை நாறிய வியன் ஞாலந்து**
**வல மாதிரத்தான் வளிகொட்ப**
**வியனாண்மீ னெறி யொழுகப்**
**பகற் செய்யும் செஞ் ஞாயிறும்**


**ISBN Number: 978-81-986812-3-2**

**இரவுச் செய்யும் வெண் திங்களும்**
**மை தீர்ந்து கிளர்ந்து விளங்க**
**மழை தொழில் உதவ மாதிரங் கொழுக்கத்.**
**(மதுரைக்காஞ்சி 1- 10)**

பொங்கி அலைவீசும் பரப்பினைக் கொண்டது கடல். அதனை எல்லையாகக் கொண்ட இவ்வுலகத்தில் தேன்கூடுகள் தொங்குகின்ற உயர்ந்த முகடுகளைக் கொண்ட மலைகள் தோன்றியுள்ளன. வானப் பெருவெளியில் காற்று வலிமையுடன் சுழன்று கொண்டுள்ளது எல்லாவற்றையும் விடப் பெரிதாக அகன்றுள்ள விண்மீண்கள் தத்தம் வழியில் செல்கின்றன. பகலில் ஒளிதரும் ஞாயிறு இரவில் ஒளிதரும் திங்கள் ஆகிய இரண்டும் மயக்கமின்றி தோன்றி ஒளிர்கின்றன. வேண்டும்போது வேண்டிய மழை பெய்தது எனக் கூறப்பட்டுள்ளது. பட்டினப்பாலையில்,

**நீல் நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரு**
**நாள்மீன் விராய கோள்மீன் போல (பட்டி-67-68)**

இவ்வடிகளில் பொதுவான வலவோட்டம் குறித்து கூறப்பட்டுள்ளது.

வானியல் செயற்பாடுகளினால் பெருவெள்ளம், மழையின்மை, பஞ்சம், வறட்சி, மன்னனின் இறப்பு முதலானவை நிகழுமென்று, முன்கூட்டியே பலன்களை


**ISBN Number: 978-81-986812-3-2**

அறிந்துகொள்ளும் நிலையினை அக்கால மக்கள் அறிந்திருப்பதை காணமுடிகிறது.

பரிபாடலில், தலைவி விரும்பிய தலைவனை அவளுக்கு மணம் முடித்து வைக்க பெற்றோர் இசைந்ததை, தலைவனுக்கு தெரிவிக்க தோழி முற்படும் பாடலில் ஜோதிடம் குறித்த செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**விரிகதிர் மதியமொடு வியல் விசும்பு புணர்ப்;**
**எரிசடை எழில்வேழம் தலையெனக் கீழிருந்து**
**தெருவிடைப் படுத்த மூன்று ஒன்பதிற்**
**றிருக்கையுள்**
**உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர;**
**வருடையைப் படிமகன் வாய்ப்பப் ; பொருள்தெரி**
**புந்தி மிதுனம் பொருந்தப்; புலர்விடியல்**
**அங்கி உயர்நிற்ப அந்தணன் பங்குவின்**
**இல்லத் துணைக்கும் பாலெய்த; இறையமன்**
**வில்லிற் கடைமரம் மேவப் பாம்பொல்லை**
**மதியம் மறைய; வருநாளில் வாய்ந்த**
**பொதியின் முனிவன் புரைவரைக் கீறி**
**மிதுனம் அடைய விரிகதிர் வேனில்**
**எதிர்வரவு மாரி இயைகென; இவ்வாற்றான்**
**புரைகெழு சையம் பொழிம்மழை தாழ**
**நெரிதரூவும் வையைப் புனல் (பரிபாடல். 11: 1-15)**

 **ISBN Number: 978-81-986812-3-2**

இவ்வடிகளில் விரிகதிர்களையுடைய மதியத்தோடு அகன்ற வானத்துக் கண்ணே ஒன்றுபடுத்திச் சேர்ப்பதன் பொருட்டாக, எரி போன்ற சடையினையுடையவனாகிய அழகிய களிறு போன்ற சிவபெருமான் தலைமை கொள்ள, அவனுக்குக் கீழாக அமர்ந்திருந்து அறங்கேட்ட முனிவர்கள், வீதிகளாகப் பகுத்தமைத்தவை மூன்றாகும். அம்மூன்று வீதிகளும் ஒவ்வொன்றினும் ஒன்பது நட்சத்திரங்களின் இருக்கைகளைப் பொருந்தியவளாகப் பனிரெண்டு இராசிகளாக விளங்கும். அவற்றுள், நிறம் பொருந்திய வெள்ளி என்னும் சுக்கிரன் ஏற்றின் தன்மை கொண்ட இடபராசியினை அடைந்தான். செவ்வாய் மேடத்திற் சேர்ந்திருந்தான். பனுவற் பொருள்களை உணர்கின்ற ஞானவானாகிய புதன் மிதுனத்தில் பொருந்தினான்.

புலர்கின்ற விடியற்காலைக்கு உரியோனாகிய சூரியன் தனக்குரிய வீடாகிய சிம்மத்திற்கு மேல் வீடாகிய கடகராசியில் நின்றான். அந்தணனாகிய குருவானவன் சனியின் மகரவீட்டிற்கு அடுத்த வீடாகிய கும்பத்திற்குப் பக்கத்து வீடாகிய மீனத்தை அடைந்தான். அனைவர் உயிரையும் போக்கும் எமனாகிய சனியானவன், தனுசுக்கு அடுத்ததாகிய மகரத்தில் பொருந்தியிருந்தான். ராகுவாகிய பாம்பானவன் விரையச் சென்று சந்திரனை மறைத்தபடி மகரத்தில் நின்றான். இவ்வாறு கோள்கள்


**ISBN Number: 978-81-986812-3-2**

பொருந்தி வந்த பௌர்ணமி நாளாகிய உத்தராட நட்சத்திரம் நாளிலே பொதியில் முனிவனுக்கு உரியதான உயர்ச்சி பொருந்திய மலையினைக் கடந்து காற்றும் தென்கிழக்குத் திசையைச் சார்ந்து வரலாயிற்று, சூரியனின் கதிர்கள் விரிந்து வெம்மை செய்துவந்த வேனிற்காலத்தினை வெல்லும் பொருட்டாக எதிரிட்டு வருகின்ற கார்காலமானது வந்து தன்மை உண்டாயிற்று, இக்காரணங்களால் உயர்ச்சி பொருந்திய மலைப் பகுதியிடத்தே பெருமழையும் பெய்தது. அதனால் வையை ஆற்றிலும் வெள்ளம் வந்ததை குறிப்பிடுகிறது.

காப்பியங்களில் வானியல் குறிப்புகளைக் காட்டிலும் பலனறிதல் மிகுத்து காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தில், அரசனின் இறப்பை முன்பே உணர்த்திய கோப்பெருந்தேவியின் கனவு

**குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்**
**கடை மணியின் குரல் காண்பென் காண், எல்லா!**
**திசை இரு நான்கும் அதிர்ந்திடும்; அன்றி**
**கதிரை இருள் விழுங்கக் காண்பென் காண்**
**எல்லா!**
**விடும் கொடி வில்லிஇர, வெம் பகல் வீழும்**
**கடுங் கதிர்மீன் இவை காண்பென் காண், எல்லா!**
**கருப்பம… (சிலப். வழக்குரைகாதை. 2-8)**

 **ISBN Number: 978-81-986812-3-2**

என்ற வரிகள் அரசனின் செங்கோலும் வெண்கொற்றக் குடையும் நிலத்தில்வீழும், வாயிலின்கண் கட்டிய மணி உள்ளம் நடுங்குமாறு அசையும், இரவு நேரத்தில் வானவில் தோன்றும், பகல் நேரத்தில் விண்மீன்கள் எரிந்து கீழே விழும். கதிரை இருள் விழுங்குவது போன்ற தீக்கனா கண்டதை அறிய முடிகிறது.

கூடலூர் கிழார் என்னும் சங்கப்புலவர் புறநானூற்றில் பாடிய பாடல் ஒன்றில் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் இறுதி நாட்களில் பங்குனி மாதத்தில் வானிலிருந்து ஒரு விண்மீன் தீப்பிழம்பு போல் ஒளியுடன் எரிந்து விழுந்தது. பங்குனி மாதத்தில் விண்மீன் எரிந்து விழுந்தால் அரசனுக்கு கேடுவரும் என்பதை கூடலூர் கிழார் நன்கு அறிந்திருக்கின்றார் அந்த விண்மீன் எரிந்து விழுந்ததையும், மற்றும் சில விண்மீன்களின் நிலையினையும் ஆராய்ந்த கூடலூர் கிழார், சேரன் இன்னும் ஏழு நாட்களில் இறப்பான் என்பதையும் உணர்ந்திருந்தார். அவர் எண்ணியது போல் ஏழாம் நாளில், சேரன் இறந்தான் என்ற செய்தியை கீழ்க்காணும் பாடல் உணர்த்துகிறது.

**ஆடு இயல் அழல் குட்டத்து**
**ஆர் இருள் அரை இரவில்**
**முடப் பனையத்து வேர் முதலாக**

 **ISBN Number: 978-81-986812-3-2**

**கடைக் குளத்துக் கயம் காயப்**

**பங்குனி உயர் அழுவத்துத்**

**தலைநாள் மீன் நிலை திரிய**

**நிலைநாள் மீன் அதன்எதிர் ஏர்தரத்**

**தொல்நாள் மீன் துறை படியப்**

**பாசிச் செல்லாது ஊசி முன்னாது**

**அளக்கர்த் திணை விளக்காகக்**

**கனைஎரி பரப்பக் கால்எதிர்பு பொங்கி**

**ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே (புறம்.229. 1-12)**

**…நோயிலன் ஆயின் நன்றுமற்று இல்லென**

**அழிந்த நெஞ்சம் மடியுளம் பரப்ப**

**அஞ்சினம் எழுநாள் வந்தன்று இன்றே**

**(புறம். 229. 15-17)**

**…மேலோர் உலகம் எய்தினன் ஆகலின்**

**(புறம். 229. 22)**

என்ற வரிகளில், ஒரு பங்குனி மாதத்து முதற் பதினைந்து நாட்களுள், மேட இராசியில் உள்ள கார்த்திகை நட்சத்திரத்தில் இருள் நிறைந்த நடு இருவில், வளைந்த பனைமரம் போல் தோற்றமளிக்கும் அனுடம் என்னும் நட்சத்திரக் கூட்டத்தின் அடிப்பகுதிக்கு முந்திய நட்சத்திரமாகிய கேட்டை முதலாக, கயமாகிய குளத்தைப் போல் தோற்றமளிக்கும் புனர்பூச நட்சத்திரத்தின்


**ISBN Number: 978-81-986812-3-2**

முடிவிலே உள்ள நட்சத்திரமாகிய திருவாதிரை நட்சத்திரம் எல்லையாக உள்ள நட்சத்திரங்கள் பதின்மூன்றும் (கேட்டை, அனுடம், விசாகம், சுவாதி, சித்திரை, அத்தம், உத்தரம், பூரம், மகம், ஆயில்யம், பூசம், புனர்பூசம், திருவாதிரை) விளங்கிக் காய்ந்தன. அப்பொழுது உத்தரம் என்னும் நட்சத்திரம் உச்சத்தில் இருந்தது. அந்த உத்தர நட்சத்திரம் உச்சியிலிருந்து சாய்ந்தது. அந்த உத்தர நட்சத்திரத்திற்கு எட்டம் நட்சத்திரமாகிய மூலம் அதற்கு எதிராக எழுந்தது. அந்த உத்தரத்திற்கு எட்டாம் நட்சத்திரமாகிய மிருகசீரிடம் மேற்கே சாய்ந்து மறையும் நேரத்தில் கடல் சூழ்ந்த உலகுக்கு விளக்குப் போல் வானில் ஒரு நட்சத்திரம் கிழக்கும் போகாமல், வடக்கும் போகாமல், வடகிழக்காக, பெரு முழக்கத்தோடு காற்றில் கிளர்ந்து எழுந்து தீப்பரந்து சிதறி வீழ்ந்தது. நோயின்றி இருப்பது நல்லது என்று வருந்திய நெஞ்சத்துடன் வாடிக் கலங்கி அஞ்சினோம். அந்த நட்சத்திரம் விழுந்து இன்று ஏழாம் நாள். சேரன் விண்ணுலகம் அடைந்தான் என்ற செய்தியின் மூலம் புலவர்களின் வானியல் அறிவை அறியமுடிகிறது.

**சங்க இலக்கியத்தில் மனையடி சாஸ்திரம்**

சங்க இலக்கியத்தில் அரண்மனை அமைக்க மனையடி சாஸ்திர விதிப்படி நாழிகை கணக்குப் பார்த்து திருமுறைசார்த்து செய்திருக்கின்றனர்.

 ISBN Number: 978-81-986812-3-2

சித்திரைமாதம்10-ம்தேதிமுதல்20-ம் தேதிக்குள் ஏதேனும் ஒரு நாளில் பகல் பொழுதில் 15 நாழிகை அளவில் சூரியன் நடு உச்சியில் இருக்கும்போது நிலத்தில் இரண்டு கம்புகளை நாட்டி, நிழல் எந்தத் திசையிலும் சற்றும் விழாத நிலையை அறிந்து மனைக்கு அடிக்கல் இட்டு திருமுறைசார்த்திய செய்தியை, கீழ்க்காணும் பாடல் உணர்த்துகிறது.

**விரிகதிர் பரப்பிய வியன்வாய் மண்டிலம்**
**இருக்கோல் குறிநிலை வழுக்காது குடக்குஏர்பு**
**ஒருதிறம் சாரா அரைநாள் அமயத்து**
**நூலறி புலவர் நுண்ணுதின் கயிறிட்டு**
**தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி,**
**பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து.**
**(நெடுநல்வாடை. 73-78)**

சூரியன் எங்கும் விரிந்த கதிர்களைப் பரப்பும் அகன்ற இடத்தினையுடையது. அச்சூரியன் மேற்கு நோக்கி உயர்ந்து எழுந்து ஒரு பக்கம் நிழல் சாராத வேளையில் இரு கோலினை நட்டு அதன் நிழல் மாறுபடாது நிற்கின்ற நண்பகல் பொழுதில் (இது சித்திரை மாதம் 10 ம் நாளுக்கு மேல் 20ம் நாளுக்குள் நிகழும் என்பர்) கட்டடக்கலை பற்றிய நூல்களைக் கற்றுத் தேர்ந்தோர், நுட்பமாக நூல் பிடித்துப் பார்த்து, திசைகளைத் தெரிந்து, அத்திசைகளுக்குரிய தெய்வங்களையும் கருத்தில்

 **ISBN Number: 978-81-986812-3-2**

கொண்டு, பெரிய புகழினையுடைய மன்னர் வாழ்வதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்ட அரண்மனை என்று மனையடி சாஸ்திர முறையினை பற்றிய விவரம் நெடுநல்வாடையில் கூறப்பட்டுள்ளது.

வெள்ளிமீனின் தோற்றமும் மழைக்குறிப்பும் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

**வசையில்புகழ் வயங்குவெண்மீன்**
**திசைதிரிந்து தெற்கேகினும் (பட்டி. 1-2)**

வெள்ளிமீன் வடக்குத் திசை விட்டுத் தெற்குத் திசைக்குப் போகுமாயின் வற்கடம் தோன்றும் என்பதை அறிந்திருக்கின்றனர் பழந்தமிழர்கள்.

**சூழ்கதிர் வான்விளக்கும் வெள்ளி சுடர்விரியத்**
**தாழ்புயல் வெள்ளந் தருமரோ (புறப்பொருள் வெண்பாமாலை)**

என்ற புறப்பொருள் வெண்பாமாலையில் ஞாயிறு முதலிய சுடர்கள் வலமாக இயங்குமிடமாகிய வானத்தைத் தனது சுடரானே விளங்கச் செய்யும் வெள்ளிக் கோளினது ஒளியானது நன்னிலைக்கண் நின்று பரவுதலானே வெள்ளத்தைக் கொடுக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

**துயர்தீரப் புயல்தரு மென**
**உயர்வெள்ளி நிலையுரைத்தன்று (புறப்.வெ. மா. 9: 16)**


**ISBN Number: 978-81-986812-3-2**

என பாடாண் படலத்தில் வெள்ளிக் கோளின் சிறப்பைக் கூறும் கொளு அமைந்துள்ளது.

**வெள்ளி தென்புலத் துறைய விளைவயல்**
**பள்ளம் வாழய பயனில் காலை (புறம் 388)**
**வெள்ளித் தோன்றப் புள்ளுக்குரலியம் (புறம் 385)**

அருந்ததியை புதுமணம் புரிந்தோர் பார்ப்பது சம்பிரதாயமாக இருக்கின்றது. சங்க இலக்கியத்தில் அருந்ததியை வடமீன், செம்மீன் என பலவாறு கூறப்பட்டுள்ள பாடலடிகள்,

**செம்மீன் அனையள் நின் தொல் நகர்ச் செல்வி**
**(பதிற் 4: 28)**
**வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய**
**கற்பினாள் (பாலைக்கலி. 1: 21)**

கார்த்திகை நட்சத்திரத்தை அறுமீன் என்று குறிப்பிடப்பட்டுள்ள பாடலடிகள்,

**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள் (அகம்: 141-8)**
**மகம் விண்மீனை கூறும் பாடலடி**
**மழைநீங்கிய மாவிசும்பின்**
**மதிசேர்ந்த மக வெண்மீன் (பட்டி- 34-35)**

மழைப்பொழிவை கூறும் பாடலடிகள்,

**வான்முகந்தநீர் மலைப்பொழியவும்**
**மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்**
**மாரிபெய்யும் பருவம்போல (பட்டி 126-128)**

 **ISBN Number: 978-81-986812-3-2**

## முடிவுரை

எந்த ஒரு செயலை செய்வதற்கு முன்பும் நாள் நட்சத்திரம் பார்க்கும் வழக்கம் அக்காலம் முதல் இக்காலம் வரை வழக்கத்தில் இருந்து வருகிறது. நல்ல நாள், நட்சத்திரம் பார்த்து செயலை ஆரம்பித்தால் நல்லது நடக்கும் என்று நம்பினர். இந்நம்பிக்கை பழங்காலம் முதலே இருந்து வந்துள்ளதை பண்டைய தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. நாள், நட்சத்திரம் மட்டுமன்றி நிமித்தங்களின் மூலமும் பின்னர் நிகழவிருக்கும் நிகழ்வை முன்னரே உணர்ந்தனர் என்பதையும் சங்க இலங்கியங்களின் வாயிலாக அறியமுடிகின்றது.

## துணை நூற்பட்டியல்


[1] அகமது மரைக்காயர், மு. இ, *மலைபடுகடாம்* கங்கை புத்தக நிலையம், சென்னை, 2010.

[2] இராமமூர்த்தி, இராம. *மதுரைக்காஞ்சி*. கங்கை புத்தக நிலையம், சென்னை, 2010.

[3] இளம்பூரணனார், *தொல்காப்பியம் - பொருளதிகாரம்*. சாரதாபதிப்பகம், சென்னை, 2005.

[4] கலாவதி, வி. *தமிழ் இலக்கிய வரலாறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2023.


 **ISBN Number: 978-81-986812-3-2**

[5] சுப்பிரமணியன், ச. வே. *சங்க இலக்கியமும் உரையும்*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.

[6] சுப்பிரமணியன். பெ (உ.ஆ), *பரிபாடல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.

[7] சோமசுந்தரனார், திரு. பொ. வே. *புறப்பொருள் வெண்பாமாலை*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2002.

[8] பாலசுப்பிரமணியன், கு. வெ. *புறநானூறு மூலமும் உரையும்* (உ. ஆ). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[9] மாணிக்கவாசகன், ஞா. *புறநானூறு*. உமாபதிப்பகம், சென்னை, 1998.

[10] விசுவநாதன், அ. *கலித்தொகை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.

 **ISBN Number: 978-81-986812-3-2**

# திருக்குறளில் மேலாண்மைக் கோட்பாடுகள்

**முனைவர் பா. தமிழரசி**, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

## முன்னுரை

மனித இனம் தொடங்கிய பொழுதே மேலாண்மையும் தொடங்கி விட்டது எனலாம். புராதன மனிதனிடம் குருத்துவிட்ட தலைமைப் பண்பும், வழிநடத்தும் இயல்புகளுமே அவனை இயற்கையோடு இயையவும், இடர்களைத் தாண்டி நீடிக்கவும் உதவின. அன்றைய இலக்கிங்களில் போகிறபோக்கில் நிர்வாகம், தலைமைப்பண்பு. முடிவெடுத்தல், தகவல்தொடர்பு, நேர மேலாண்மை போன்றவற்றைப் பற்றிப் புலவர்கள் கூறியுள்ளனர். அவை முற்றிலும் புனைவாக இருந்திருந்தால், நிச்சயம் அவர்கள் காலத்திலேயே நிராகரிக்கப்பட்டிருக்கும். அவ்வகையில் எக்காலத்திற்கும் பொருந்தும் அறநூலான திருக்குறளில் வணிக நிர்வாகம், மேலாண்மையியல் தொடர்பான சிந்தனைகள் பதிவு பெற்றுள்ளனவா என்பதை ஆராயும் நோக்கோடு இக்கட்டுரை அமைகின்றது.

## மேலாண்மைச் சிந்தனை

மேலாண்மை என்ற கருத்தியல் 19ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியில் தோன்றியது. இக்கருத்தியல்

 ISBN Number: 978-81-986812-3-2

உரிமையின் அதிகாரம் கடமை என்பதான உணர்வுகளை மட்டுமே கொண்டிருந்தது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே இனக்குழுவாக வாழ்ந்த மனிதன் ஐம்புலன்களுக்கும் ஆதாரமாக இருந்த வயிற்றுக்கு உணவு சேகரித்தலை முதன்மையான பணியாகக் கொண்டிருந்தான். இப்பணியானது மனிதனின் உடல்தளத்தில் முழுக்கவனம் செலுத்தியது. பெருத்த உடல் அமைப்பு வலிமையின் அடையாளமாகக் கருதப்பட்டது. இத்தகைய வலிமை அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டது. அதிகாரம் என்பது மேலாண்மையின் குறியீடாக நிகழ்த்தப்பட்டது.

மேலாண்மை என்ற சிந்தனை உதயமாகும் போது உடற்கூற்று தளத்தில் வினைபுரிந்த அதிகாரம் அறிவுச் செயற்பாட்டையும் தன்னகத்தே தகவமைத்துக் கொண்டது. அறிவும், அனுபவமும் இணைந்ததன் வழி புதிய வேட்டைக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தகைய படிப்படியான வளர்ச்சி மேலாண்மையில் பல புதிய கூறுகளை உருவாக்கியது. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை மேலாண்மை என்ற பதம் பயன்படுத்தவில்லை. கி.பி.3ஆம் நூற்றாண்டு அளவில் கூறப்பட்ட

**அருள் இல்லார்க்கு அவ்வுலகம்**
**பொருள்இல்லார்க்கு**

 **ISBN Number: 978-81-986812-3-2**

**இவ்வுலகம் இல்லாகி யாங்கு (குறள், 247)**

என்பதைப் போன்ற பொருளாதாரச் சிந்தனை நடப்புக் காலத்தில் பொருளை ஈட்டுவதற்கான மேலாண்மை என்ற பரிமாணத்தைப் பெற்றது. மேலாண்மை என்பது முற்றிலும் மனிதனை மையப்படுத்திய மனிதவளத்தை மேம்படுத்தக்கூடியக் கருத்தியல் அவ்வகையில் திருவள்ளுவர் மனிதனை மேலாண்மை செய்வதில் தனிக்கவனம் செலுத்துகிறார்.

**தொழில்நுட்பம் (Technology)**

மனிதர்களின் உடல் மற்றும் அறிவுச் செயல்பாடுகளில் காணப்படும் நுட்பமான மாறுதல் முறைகளைத் தொழில்நுட்பமாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**குறிப்பிற்கு குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல் (குறள்: 702)**

முகக்குறிப்பினாலே உள்ளக் கருத்தை அறியும் ஆற்றல் உடையவர்களைத் தம் உறுப்பைக் கொடுத்தாவது தக்க வைக்க வேண்டும் என்கிறார். இத்தகைய நுண்ணறிவு உடையவர்கள் அரசன் அருகில் இருந்தால், அரசன் அழிந்தாலும் அவனைச் சார்ந்த நாடும் மக்களும் அழியாது காக்க முடியும் என்பது வள்ளுவரின் திண்ணமான கருத்தாகும். “உடலின் முகம், கண் முதலிய உறுப்புகளில் தோன்றுகின்ற குறிப்புகள் வழியாக எதிராளிக்குள் நிகழும்

 **ISBN Number: 978-81-986812-3-2**

கருத்தைப் பொருள்கோடல் செய்ய வேண்டும். அதாவது, புலன்களின் உடல்கூற்றுச் செயலை வள்ளுவர் என்ற நீதி போதகர் ஒரு பொருட்டாகக் கொள்வது கிடையாது" (ராஜ் கௌதமன், அறம் / அதிகாரம் ப. 18) என்ற இவ்வதிகாரத்தை (குறிப்பறிதல் - பொருட்பால்) அறத்தின் சாயம் கொண்டு பார்க்கும் அறிவு ஜீவிகளுக்கு இது ஒரு நிர்வாகவியல் சிந்தனை என்பது புலப்படாது.

போர்க்காலச் சமூகத்தில் தன்னையும் சமூகத்தையும் நாட்டையும் காக்க வேண்டிய கடமை எல்லா மனிதர்களிடமும் உள்ளது. ஆகையால் குறிப்புணரும் ஆற்றல் குறிப்பிட்ட மனிதர்க்குரியது அல்ல!. அனைத்துத் தரப்பிலும் வர வேண்டும். அப்படி இல்லாமற் போனால் **'உறுப்பினுள் என்ன பயத்தவோ கண்' (குறள், 705)** என்ற கருத்து வலுப்பெறும். இதன் மூலம் வள்ளுவர் உடற்கூற்றுச் செயலை ஏளனம் செய்யவில்லை. எதிராளியின் நாக்கால் முடக்கப்பட்ட சொல்லின் பொருளை கண்வழியே குறிப்பறிய முடியாதவர்களின் கண்கள் வேற்று மன்னரால், சமூகத்தாரால், இனத்தாரால், மொழியினரால் அழிக்கப்பட்டுவிடும் என்பதாகும்.

**திட்டமிடல்**

திட்டமிடும் போது ஐந்து செய்திகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

 **ISBN Number: 978-81-986812-3-2**

1. **கைகளில் இருக்கும் மூலாதாரம்**
2. **நம்மிடமிருக்கும் கருவிகள்**
3. **செயலின் தன்மை**
4. **சரியான நேரம்**
5. **சரியான இடம்**

நாம் செய்கிற செயல் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் முக்கியம். சரியான நேரத்தில் அச்செயலைத் தொடங்க வேண்டும். அதைச் செயல்படுத்த சரியான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இத்தகைய நுணுக்கங்களையும் திருக்குறள் தெரிவிக்கிறது.

**பொருள், கருவி, காலம், வினைஇடனொடு**
**ஐந்தும்**
**இருள்தீர எண்ணிச் செயல் (குறள், 675)**

என்கிற குறள் இன்று எல்லாத் திட்டமிடலுக்கும் பொருந்தும். திருவள்ளுவர், 'திட்டமிடாமல் செய்கிற முயற்சி எப்படி எட்டாக்கனியாகவே இருந்து விடும்' என்றும் எச்சரிக்கிறார். 'செய்வதற்குத் தக்க வழிகளிலே முறையாக செய்யப்படாத முயற்சி, பலர் துணையாக நின்று அதனை முடிக்குமாறு தூண்டிய போதிலும் குறைபட்டுப் போய்விடும்' எனவும் கூறுகிறார்.

**ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும் (குறள், 468)**

 **ISBN Number: 978-81-986812-3-2**

நிர்வாகத்தில் திட்டமிடும் போது திட்டத்தில் உள்ள அனைத்து சரத்துகளையும் எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ளக் கூடாது. அதில் சற்று பூடகம் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தத் திட்டத்தை முறியடிக்க முயல்பவர்கள் முடியாமல் தோற்பார்கள்.

திருவள்ளுவர் செய்யும் வழிகளை அறிந்து இடையூறுகளைத் தாங்கிச் செய்து முடிக்கவல்லவனைத் தேர்ந்தெடுத்து அவனிடம்தான் ஒரு செயலை ஒப்படைக்க வேண்டும் என்று ரோவனைப் போன்று ஒருவரை மனத்தில் வைத்து எழுதியிருக்கிறார்.

**அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால்**
**வினைதான்**
**சிறந்தானென்று ஏவற்பாற் றன்று (குறள், 515)**

இடையூறுகள் இல்லாத பணி எதுவும் இருக்க முடியாது. அவற்றைக் கண்டு பின்வாங்காதவர்கள் தான் வினைத்திட்பம் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள்.

**ஊறொரால் உற்றபின் ஒல்காமை**
**இவ்விரண்டின்**
**ஆறென்பர் ஆய்ந்தவர் கோள் (குறள், 662)**

இலக்கியங்களைப் பார்க்கும்போது பழங் காலத்தில் எந்த அளவிற்கு ஒவ்வொரு செயலையும் திட்டமிடுவதோடு சரியாக அவற்றைச் செய்கிற வழிமுறைகளை

 **ISBN Number: 978-81-986812-3-2**

ஒவ்வொன்றாகக் கையாண்டார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**நிதி மேலாண்மை**

திருக்குறளில் நிதி மேலாண்மை குறித்து வள்ளுவர் நுட்பமானக் கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அரசன் சிறந்த நிர்வாகத்தை நடத்த பொருள் வரும் வழிகளை உண்டாக்க வேண்டும். அவ்வாறு ஈட்டுகின்ற செல்வத்தை முறையாகச் சேமிக்க வேண்டும். பின்பு அவற்றைத் தகுந்த வகையில் பாதுகாப்பு செய்ய வேண்டும். நாட்டின் மேம்பாட்டிற்கு அதைத் தக்கபடி பார்த்து பார்த்து விரயமாக்காமல் கிரயமாகும்படி, செலவு செய்ய வேண்டும். அப்போதுதான் நிதி மேலாண்மை முறையாகப் பேணப்படும்.

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு (குறள், 385)**

செலவு செய்கிற பணத்தை விட அதிகமாக ஈட்ட வேண்டும். (இலக்கியத்தில் மேலாண்மை, இறையன்பு, ப. 56) இதில் வள்ளுவர் தெளிவாக இருந்தார் என்பதை இதனால் உணர முடிகிறது.

**தலைமைப்பண்பு**

தலைமைப் பண்பு உள்ளவர்கள் எந்தவொரு கட்டத்திலும் தம் அணியைத் தம்மோடு உளப்பூர்வமாக உடன் அழைத்துச் செல்லத் தயங்க மாட்டார்கள்.

 **ISBN Number: 978-81-986812-3-2**

அவர்கள் சொற்களின் மூலம் மற்றவர்களின் சோர்வை அகற்றி அவர்களையும், மூல நிதி கிளை நிதிகளை அரவணைப்பதுப் போல அணைத்து ஜீவநதியாக மாறுவார்கள். அவர்களை யாராலும் வெல்ல முடியாது. திருவள்ளுவர் கூறும்,

**சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**

**இகல்வெல்லல் யார்;க்கும் அரிது (குறள், 647)**

என்பதற்கு இலக்கணமாக, ஜீலியஸ் சீசரைக் காணமுடிகிறது. ஜீலியஸ் சீசர் ஃகாலிக் போரை நடத்திய போது ஜெர்மானிய அறியோ விஸ்டஸ் என்கிற தளபதியோடு போரிட நோந்தது. ஜெர்மானியப் படையைப் பற்றியும் அதன் அளவைப் பற்றியும் அவர்களுடைய ஆக்ரோசத்தைப் பற்றியும் வெளியான தகவல்களைக் கண்டு ரோமானியப் படைகள் நடுங்கின. சீசர் விரைவாகச் செயல்பட்டார். முதலில் வதந்தி பரப்புகின்றவர்களைக் கைது செய்தார். பிறகு, தன் சிப்பாய்களிடம் தானே நேர் நின்று தன் துணிச்சல் வாய்ந்த முன்னோர்கள் பற்றியும் அவர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்த சம்பவங்கள் பற்றியும் பேசினார். அதே நேரத்தில் ‘பலவீனமான மனநிலை உள்ளவர்களைப் போருக்கு அழைத்துச் செல்லப் போவதில்லை’ என்று கூறினார். உடனே வீரர்கள் தாங்கள் தைரியமானவர்கள் என்பதை


**ISBN Number: 978-81-986812-3-2**

நிரூபிப்பதற்காகவே வேகமாகப் போராடத் தொடங்கினார்கள். வெற்றி விளைந்தது. (இலக்கியத்தில் மேலாண்மை, இறையன்பு, ப. 353) இனிமையான சொற்களும் தக்கவர்களுக்குப் பொருளை உதவி காக்கவல்ல தன்மையும் உள்ள தலைவர்களும் எப்போதும் நீதி தவறாமல் செயல்படுபவர்களும் அறநெறியிலிருந்து வழுவாமல் இருப்பவர்களும் அப்படிப்பட்ட தலைமையை வகிப்பவர்கள் என்று வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார்.

**இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத்**
**தன்சொலால்**
**தான்கண் டனைத்திவ் வுலகு (குறள், 387)**
**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும் (குறள், 388)**

இலக்கியம் கூறும் தலைமைப்பண்புகள் மனிதநேயமும், சாமர்த்தியமும், பணிவும், மேம்பட்ட குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவை. சூழலுக்கு ஏற்ப, சாதுர்யமாக நிர்வகிக்கும் கலையை அவை நமக்குச் சொல்லித்தருகின்றன. மேலாண்மை நம்மைக் கடிவாளம் போட்ட குதிரையாக்க முயற்சி செய்கிறது. இலக்கியமோ நமக்குப் பருந்துப் பார்வையைத் தருகிறது.

**கருணையோடு கூடி நிர்வாகம்**

திருவள்ளுவர் கருணையோடு நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி ஓர்

 **ISBN Number: 978-81-986812-3-2**

அதிகாரத்தையே எழுதியிருக்கிறார். அதிகாரம் மட்டுமே பயன்படாது என்பதை உணர்த்தும் அதிகாரம் அது. ‘கண்ணோட்டம்’ என்கிற அந்த அதிகாரத்தில் இவ்வுலகம் அழியாமல் இருப்பது கண்ணோட்டத்தால் தான் என்று சுட்டிக்காட்டுகிறார். விழிகள் அழகு பெறுவது கருணையினால்தான். “கருணையற்ற கண்கள் புண்கள்” என்று குறிப்பிடுகிறார்.

அதே நேரத்தில் ‘கருணையும் குறையாமல் கருமமும் சிதையாமல் காரியம் ஆற்ற வேண்டும்’ என்கிறார். இன்று மேலாண்மையில் பணிகள் சார்பாகவும் பணியாளர்கள் சார்பாகவும் ஒருங்கிணைத்து இயக்குகின்ற மேலாளரைச் சிறந்த மேலாளர்கள் என்று அழைக்கிறார்கள். அதைத்தான் வள்ளுவர் அன்றே கூறிpயுள்ளார்.

**கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
**உரிமை உடைத்திவ் வுலகு (குறள், 578)**

**அச்சிறுத்தும் மேலாண்மை**

அச்சிறுத்தும் மேலாண்மை அதிகப்பயன் விளைவிக்கும் என்கிற நம்பிக்கை சிலருக்கு இருக்கிறது. குற்றங்களைத் தண்டிப்பது வேறு சர்வாதிகாரியாக நடப்பது வேறு. பணியாளர்கள் எப்போதும் அச்சத்தின் பிடியில் இருந்தால் ஒருவிதப் பதற்றத்திற்கு உள்ளாவார்கள். அப்போது அடிமனத்தில் வெறுப்பும்

 **ISBN Number: 978-81-986812-3-2**

கோபமும் படிந்திருக்கும். ஒரு நிர்வாகி தன்பணியாளர்களையோ, ஆட்சியாளர்கள் மக்களையோ ஒடுக்கி வேலை வாங்கக் கூடாது. அது தற்காலிகமாக மிகச்சிறந்த பலன்களைத் தரும். ஆனால் நாளடைவில் ஏற்கெனவே இருந்ததைவிட மோசமான நிலைமைக்கு நிறுவனம் தள்ளப்படும். அரசர்களுக்குத் திருவள்ளுவர் கூறிய நிர்வாகிகளுக்கும் பொருந்தும். அவர் குடிகளை வருத்தும் தொழில்களை மேற்கொண்டு முறையில்லாத செயல்களைச் செய்து நடக்கும் அரசர் கொலைத் தொழிலைக் கொண்டவனைவிட கொடியவன் என்று குறிப்பிடுகிறார்.

**வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு (குறள், 552)**

நிர்வாகம் திருத்துவதற்காக நடத்தப் பெற வேண்டுமே தவிர வருத்துவதற்காக நடைபெறக் கூடாது.

**சொல்வன்மை**

சொற்கள் வலிமை வாய்ந்தவை. அவற்றை எச்சரிக்கையோடு கையாள வேண்டும். பயன்படுத்திய பிறகு அவற்றைத் திரும்பப்பெற முடியாது என்பது மட்டுமல்ல அவற்றால் ஏற்படும் பாதிப்பையும் நம்மால் திரும்பப்பெற முடியாது. மேலாண்மையைப் பொறுத்தவரை குறைந்த சொற்களை உபயோகித்து நிறைய பொருளைத் தருவது சிறந்த தகவல் பரிமாற்றம்.

 ISBN Number: 978-81-986812-3-2

அதைச் செய்கிறவர்களே மிகச்சிறந்த பேச்சாளர்களாகக் கருதப்படுவார்கள். இனிமையான சொற்களின் இன்றியமையாமையைத் திருக்குறள் தெளிவாக்குகிறது.

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் (குறள், 91)**

திருவள்ளுவர் 'சொல்வன்மை பெற்றவன் சோர்வடைவதில்லை அவனை வெல்வது சிரமம்' என்று குறிப்பிடுகிறார்.

**உணர்ச்சி மேலாண்மை**

இன்றைய சூழலில் நிறுவனங்களை நிர்வகிக்க வெறும் மேற்பார்வை மட்டும் போதாது தலைமைப் பண்பும் தேவை. உணர்ச்சித்திறன் (Emotional Intelligence) இல்லாமல் முடிவுகள் எடுப்பதிலும் எதிர்ப்புகளைத் தாங்குவதிலும் நெருக்கடிகளைச் சமாளிப்பதிலும் பலவீனமடைந்து தோல்வி அடைந்து விடுவார்கள். பெரும்பாலானோர் தாங்கள் உணர்ச்சி வசப்படுவது தெரியாமலே உணர்ச்சிவசப்படுவார்கள். சிலருக்கோ அவற்றை எப்படிக் கட்டுப்படுத்துவது எனத் தெரியாது.

ஓர் அதிகாரத்தையே இதற்காகத் திருவள்ளுவர் ஒதுக்கியிருக்கிறார். 'இடுக்கண் அழியாமை' என்கிற அதிகாரத்தின் முதற் குறளே நுட்பமானது.

**"இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்ப தில்" (குறள், 621)**

 **ISBN Number: 978-81-986812-3-2**

உணர்ச்சித்திறன் உள்ளவர்களே சரியான வழிகாட்டியாக இருக்க முடியும். கோபம் உணர்ச்சிகளிலேயே மோசமானது. அது சலன வட்டத்தைப் போல விரிந்து கொண்டே செல்லும். கோபப்படுபவர் சமநிலையில் வருதற்கு நேரம் பிடிக்கும். அவர் சொன்ன சொற்களைப் பொறுக்க முடியாமல் போய்விடும். எக்காரணம் கொண்டும் வார்த்தைகளை வதைக்கும் வண்ணம் உபயோகப்படுத்த வேண்டாம். தீ சுட்டபுண் கூட ஆறும். ஆனால் நாக்கு சுட்ட வடு ஆறாது என்று வள்ளுவர் எச்சரிக்கின்றார்.

**ஊக்கமும் மேலாண்மையும்**

மனித வளத்தை மேம்படுத்த ஊக்கம் இன்றியமையாததது. உற்சாகமே ஊக்கத்திற்கு உரம். திருவள்ளுவர் ஊக்கத்திற்காக ஓர் அதிகாரத்தையே ஒதுக்கியிருக்கிறார். அவரைப் பொருத்தவரை எத்தனைச் செல்வம் இருந்தாலும் ஊக்கமில்லாவிட்டால் பயனில்லை. உழைத்து தேடிய செல்வத்தை மற்றவர்கள் அபகரிக்காமல் இருக்க ஊக்கமே அவசியம்.

**உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்**
**உடையது உடையரோ மற்று (குறள், 591)**

திருக்குறளில் இரண்டு குறட்பாக்கள் விலங்குகளைக் குறியீடாகக் கொண்டு ஊக்கத்தைப் பற்றி உரைக்கின்றன.

 **ISBN Number: 978-81-986812-3-2**

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்**
**புட்டுப்பா டூன்றும் களிறு (குறள், 597)**
**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின் (குறள், 599)**

இந்த இரண்டு குறட்பாக்களிலும் இடம்பெற்றிருக்கும் விலங்கு யானை. ஒன்றில் ஊக்கத்திற்காகவும் மற்றொன்றில் ஊக்கமின்மைக்கும் எடுத்துக்காட்டாகவும் உவமையாகவும் கூறப்பட்டுள்ளன. 'காட்டில் இருக்கும் யானை புலியைப் பார்த்துப் பயப்படுகிறது. உருவத்தில் பெரிதாக இருந்தாலும் மரபுவழி வந்த பயம் அதற்குள் அப்படியே இருக்கிறது. ஆனால் போருக்காகப் பயிற்றுவிக்கப்படுகிற யானை சூழல் மாறிய காரணத்தால் அதற்குள் இருக்கும் ஆற்றலை அறிந்து கொள்கிறது. தன்னைக் கண்டு அஞ்சி ஓடும் வீரர்களைப் பார்த்து ஊக்கம் கொள்கிறது. பயிற்சியால் அது துணிவுமிக்க விலங்காக மாறுகிறது. எத்தனை அம்புகள் வந்தாலும் சோர்ந்து விடாமல் போர்க்களத்தில் முன்னேறிச் செல்கிறது. எனவே, அது யாராலும் வெல்ல முடியாத பேராற்றல் பெற்று விடுகிறது" (இலக்கியத்தில் மேலாண்மை, இறையன்பு, ப. 311)

திருவள்ளுவர் உயர்வாக எண்ணுவதைப் பற்றி நமக்கு அறிவுறுத்துகிறார்.

**உள்ளுவ(து) எல்லாம் உயர்வுள்ளல் மற்றது**


**ISBN Number: 978-81-986812-3-2**

**தள்ளினும் தள்ளாமை நீர்த்து (குறள் 596)**

தண்ணீரில் இருக்கும் தாவரங்கள் வெள்ளத்திற்கேற்பத் தங்களை உயர்த்திக் கொண்டே செல்வதைப் போல் ஒருவன் தனக்கிருக்கும் ஊக்கத்திற்கொப்ப உயர்வை அடைகிறான் என்று திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

**வெள்ளத்(து) அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு (குறள், 595)**

காட்சிப்படுத்துதல் ஊக்கத்தின் ஒரு பகுதி. காட்சிப்படுத்தலைப் பொறுத்தவரை நான்கு வழிகள் இருக்கின்றன.

1. **இலக்கை நிர்ணயிப்பது**
2. **அதைக் குறித்த தெளிவான சித்திரத்தை உருவாக்குவது**
3. **அடிக்கடி அதைப் பற்றிச் சிந்திப்பது**
4. **ஆக்கப்பூர்வமான ஆற்றலை அதற்கு வழங்குவது.**

இந்த நான்கு கட்டங்களையும் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின் (குறள், 540)**

திருக்குறளைப் பொறுத்தவரைக் காட்சிப் படுத்துபவன் நிச்சயம் அதை அடைந்து விடுவான். ஆனால் செயலில்

 ISBN Number: 978-81-986812-3-2

உறுதியும் அவசியம். வெறும் எண்ணம் மட்டும் இருந்தால் அது பகல் கனவாகவே இருக்கும்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின் (குறள், 666)**

**அதிகாரப் பகிர்வு**

மேலாண்மையில் நேர நிர்வாகத்திற்குப் பிறகு இரண்டாவது முக்கியத் திறன் அதிகாரப்பகிர்வு. தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களே அனைத்துப் பொறுப்புகளையும் செய்தால் நிர்வாகச் செயல்பாடு பாதிக்கப்படும். எல்லோராலும் எல்லாம் செய்ய முடியாது. ஒவ்வொரு பணியாளரிடமும் ஒரு திறமை இருக்கும். அதைக் கண்டுபிடித்துப் பயன்படுத்துவதே நிர்வாகியின் கடமை.

**வான்குருவி யின் கூடு வல்லரக்குத்**
**தொல்கறையான்**
**தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதல் - யாம்**
**பெரிதும்**
**வல்லோமே என்று வலிமைசொல் வேண்டாம்**
**காண்!**
**எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது (தனிப்பாடல்,**
**ஔவையார்)**

எவ்வளவு முயன்றாலும் மனிதனால் தூக்கணாங்குருவிக் கூட்டைச் செய்ய முடியாது என்பதையும், சிலருக்குச் சில

 **ISBN Number: 978-81-986812-3-2**

செயல்கள் எளிதாகக் கைகூடுபவை என்றும் சொல்கிறார். இப்பாடலின் மையக்கருத்தே பகிர்ந்தளிப்பதற்கான ஆதாரம் ஆகும்.

பகிர்ந்தளிப்புக்குத் திருக்குறள் மிகச்சிறந்த இலக்கணம் ஒன்றை வகுத்திருக்கிறது. இதைக்காட்டிலும் சிறப்பாக அதிகாரப் பகிர்வை வேறு யாரும் விளக்க முடியுமா என்பது சிந்திக்கத்தக்கது.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல் (குறள், 517)**

ஒருவனை நன்றாக ஆராய்ந்த பிறகு தான் அந்தப் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்க வேணடும். அதற்குப் பிறகு அடிக்கடி அவனைத் தொந்தரவு செய்து அவன் கவனத்தைச் சிதறடிக்கக் கூடாது. ஊடாக புகுந்து யோசனை சொல்லிக் காரியத்தைக் கெடுக்கக் கூடாது. அச்செயலை அவன் முடிக்கும் வரை பொறுமை காக்க வேண்டும். இந்த அனைத்து நுட்பங்களும் இக்குறளில் கூறப்பட்டுள்ளன.

ஒருவனை ஆராயாமல் தெளிவடைவதும் ஆராய்ந்து தெளிந்த ஒருவனிடம் ஐயப்படுவதும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும் என்று வள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார்.

**தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும் (குறள், 510)**


**ISBN Number: 978-81-986812-3-2**

மேலாண்மை வல்லுநர் ரொட்ரிக் கிராமர் இது பற்றிக் குறிப்பிடும் போது பத்துக்கு எட்டு நிர்வாகிகள் தங்கள் அலுவலகப் பணியில் ஒருநேரமேனும் தவறான நபரை நம்பிவிட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்து இருக்கிறார்கள். இதற்குக் காரணம் நாம் ஒருவரைச் சந்தித்த சில நொடிகளிலேயே அவரைப் பற்றித் தீர்ப்புக் கூற முற்படுவதுதான். ஒருவரை முழுமையாக அறிந்து கொள்ளக் கால அவகாசம் தேவைப்படுகிறது. அவர்களுடைய பல்வேறு நடவடிக்கைகளை அனமதியாகக் கூர்ந்து பார்த்தால்தான் தெளிவான முடிவுக்கு நம்மால் வர முடியும். (இலக்கியத்தில் மேலாண்மை, இறையன்பு, ப.137)

**பணிநியமனம்**

போர்க்காலச் சமூகத்தில் அரசன் மண்ணைக் காக்கும் பொருட்டு பொருளாதார ரீதியாகவும் தொழில்நுட்பத்தின் (உடற்சார் கூறுகள்) வாயிலாகவும் மனிதனை மூலதனமாகக் கருதி பணிநியமனம் செய்தான். இதற்கு அடுத்த நிலையில் சமுதாயவியல் அக்கரையோடு பணிநியமனம் செய்ய வேண்டிய சூழல் அக்காலச் சமூகத்தில் நிலவியது. ஏனெனில்,

**மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு**
**இனத்து உள்ளதாகும் அறிவு (குறள், 454)**

 **ISBN Number: 978-81-986812-3-2**

என்ற குறள் வழி, ஒருவனின் செயல் அவன் மனத்தால் விளைந்தது என்றாலும் அது அவன் இனத்தால் வருவதாகும். மேலும்,

**மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்**
**இனந்தூய்மை தூவா வரும் (குறள், 455)**

என்பதன் வழியாக ஒருவனுடைய மனதும் செய்கின்ற வினையும் அவன் இனத்தின் தூய்மையால் வருவதாகும். ஆகையால் பணிநியமனத்தின் போது அவன் குடிப்பிறப்பு அறிந்து செயல்பட வேண்டும் என்கிறார்.

**குடிப்பிறந்து குற்றத்தின் நீங்க வடுப்பரியும்**
**நாணுடையான் கட்டே தெளிவு (குறள், 502)**

என்ற குறளில் நல்ல குடியில் பிறந்தவனா குற்றத்திற்கும் பழிச்சொல்லிற்கும் நாணம் உடையவனா என்று அறிந்து பணிநியமனம் செய்ய வேண்டும் என்கிறார். இதனை நடப்புக் காலத்தில் வர்க்க முரண்பாடு என்கின்றனர். இன்று இடஒதுக்கீடு என்பது பொருளாதராப் பின்புலத்தில் சாதியை வகைப்படுத்திப் பிரிக்கப்பட்டது. ஆனால், முன்னோடிய காலங்களில் ஒரு குறிப்பிட்ட இனக்குழு பிற இனக்குழுவோடு இணைந்து வாழும் வாய்ப்பு அதிகமில்லை. எப்படி ‘அந்தணர் என்போர் அறவோர்’ என்ற கருத்து முகிழ்ந்ததோ அதுபோல் பணிநியமனத்திற்கு குடிப்பிறப்பிற்கு அவசியமென்று

 **ISBN Number: 978-81-986812-3-2**

கருதியிருக்கிறார். இருப்பினும் இக்கருத்து நடப்புச் சூழலில் ஏற்க முடியாததாகும்.

**தகவல் பரிமாற்றம்**

இயற்கையில் உள்ள அனைத்துமே தகவல் பரிமாற்றம் செய்து கொண்டு தான் இருக்கின்றன. நதியும், மலரும், மரங்களும், காற்றும், மண்ணும் ஏதேனும் ஒரு செய்தியைப் பரிமாறிக் கொண்டு தான் இருக்கின்றன. ஆஸ்திரிய விஞ்ஞானி காரல் வான் ஃப்ரிஷ் தேனீக்களை உற்றுக் கவனித்து அவற்றின் மொழியை ஆய்வு செய்தார். அப்போது அவை நடனத்தின் மூலமாக சில தகவல்களைப் பரிமாறிக் கொள்வதைக் கண்டுபிடித்தார். சாரணத் தேனீக்கள் பூக்கள் எங்கு இருக்கின்றன என்று ஒற்று வேலையைச் செய்து வந்து தேன் சேகரிக்கும் பிரிவிடம் அந்தத் தகவலை ஒருவிதமான நடனத்தின் மூலமாக வெளிப்படுத்துகின்றன. தொலைவில் இருந்தால் மெதுவாக உடலை ஆட்டியும், அருகிலிருந்தால் விரைவாக ஆட்டியும் பூக்கள் இருக்கும் திசையைக் காட்டுகின்றன. (வெ. இறையன்பு, இலக்கியத்தில் மேலாண்மை, ப. 152) தகவல் பரிமாற்றத்தைப் பொறுத்தவரை ஏழு முக்கிய அங்கங்கள் இருக்கின்றன. அவை:

- **பேசுபவர்**
- **உணர்த்தும் திறன்**

 **ISBN Number: 978-81-986812-3-2**

- **தகவல்**
- **ஊடகம்**
- **உள்வாங்கும் திறன்**
- **கேட்பவர்**
- **எதிர்வினை**

ஆகியவை ஆகும். இதில் முக்கிய அங்கம் வகிப்பவர்கள் இருவர். ஒருவர் பேசுபவர், அடுத்தவர் கேட்பவர். இடையிலிருப்பவையே மற்றவை. பேசுபவர் எவ்வாறு பேச வேண்டும் என்பது குறித்து இலக்கியங்கள் எப்படி அணுகுகின்றன என்பதைப் பார்க்கும் போது இரு செய்திகளை உணர முடிகிறது. ஒன்று சொல்கிற செய்தியை அந்த இலக்கியங்களே சுவைபடச் சொல்வது, அடுத்தது அதில் வருகிற பாத்திரங்கள் மூலம் சொல்வது. இவ்விரு விதங்களில் இலக்கியங்கள் பேசுபவர் குறித்த நம்முடைய பார்வையைத் தெளிவாக்குகின்றன.

திருவள்ளுவர் ஒருவருடைய உணர்த்தும் திறன் அந்தப் பேச்சைக் கேட்க விரும்பாதவர்களையும் கேட்கத் தூண்டும்படி இனிமையானதாக இருக்க வேண்டும். கேட்க விரும்புபவர்கள் இடத்தை விட்டு அகலாதவாறு பிணைக்க வேண்டும். அவ்வாறு உணர்த்துவதற்கு ஒவ்வொரு சொல்லின் திறனையும் முற்றிலும் அறிந்து சொல்ல வேண்டும். அப்படிப் பட்ட உணர்த்தும் திறன்

 **ISBN Number: 978-81-986812-3-2**

அறங்களையும் பொருளையும் விட மேலானது என்று குறிப்பிடுகிறார்.

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல். (குறள், 643)**
**திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதனினூஉங்கு இல். (குறள், 644)**

**கால மேலாண்மை:**

மேலாண்மையைப் பொறுத்தவரை தற்போதுள்ள சூழலில் ஒரு நவீன மேலாளருக்கு ஆறு மேலாண்மைக் கருவிகள் தேவைப்படுகின்றன.

- **நேர மேலாண்மை**
- **பொறுப்பு ஒப்படைப்பு (பகிர்ந்தளித்தல்)**
- **தகவல் பரிமாற்றத்திறன்**
- **உறுதிப்பாடு**
- **பதற்ற மேலாண்மை**
- **சமரசத்திறன்**

நேர மேலாண்மை இல்லாதவர்கள் எந்தப் பதவியிலும் வெற்றி பெற இயலாது. நேர மேலாண்மையை நம் இந்திய மரபுக் கதைகளான ‘பஞ்சதந்திரம்’, ‘ஹிதோபதேசம்’ போன்றவை உணர்த்துகின்றன. நேர மேலாண்மையில் காகம் இயல்பாகவே கெட்டி என்பதால் தான் பஞ்சதந்திரத்தில் மட்டுமல்ல திருக்குறளிலும் உவமையாகக்

 **ISBN Number: 978-81-986812-3-2**

கையாளப்பட்டிருக்கிறது. (மு. இரவீந்திரன், திருக்குறள் காட்டும் நிர்வாக இயல் - வணிக இயல், ப. 42) தன்னைவிட வலிமையுள்ள கோட்டானை அது பகல் நேரத்தில் வென்று விடுகிறது. கூகைக்குப் பகலில் விழிகளின் வெளிச்சம் போதாது. பகலாக இருப்பதால் ஒன்று திரண்டு அதை எதிர்க்கும் வல்லமை காகத்திற்கு ஏற்பட்டு விடுகிறது. அதைப் போலவே ஒரு நிறுவனத்தின் தலைவரும் போட்டியாளரை வீழ்த்த, சரியான காலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**பகல் வெல்லும் கூகையைக் காக்கை**
**இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (குறள், 481)**

மேலாண்மையைப் பொருத்தவரை நேரம் எவ்வளவு முக்கியம் என்பதை 'ஹார்வர்ட் மேலாண் பல்கலைக்கழகத்தில்என்ன சொல்லித் தருவதில்லை' என்கிற புத்தகத்தில் மெக்கார்மார்க் கோடிட்டுக் காட்டுகிறார். அதில் அவர் பல கருத்துக்கள் சரக்குள்ளவையாக இருந்தாலும் சரியான நேரத்தில் செயல்படுத்தாமல் போனதால்தான் தோற்றுப் போகின்றன என்கிறார். சிறந்த நிர்வாகிகள் கூட உரிய நேரத்தைத் தேர்ந்தெடுக்காமல் தோல்வியடைந்து விடுகிறார்கள். ஹிட்லர் எப்போதும் பிரம்ம முகூர்த்தத்தில் எழுவதையே தன் வழக்கமாகக் கொண்டிருந்தார். அது

 ISBN Number: 978-81-986812-3-2

ஆழ்ந்த தனிமையில் நிறைய சிந்திக்கவும் திட்டமிடவும் அவருக்கு உதவியாக இருந்தது.

பல நேரங்களில் போர்களில் முந்தியவர்கள் குறைவான படைவீரர்களுடன் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இந்தச் சரித்திரச் சம்பவங்களைத் திருவள்ளுவர் அழகாக தெளிவுபடுத்துகிறார். ஏற்ற காலத்தை அறிந்து ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் அதுவும் கைகூடும்.

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின். (குறள்,484)**

மகாபாரதத்தில் நேரத்தின் அருமை குறித்து கர்ணனின் மூலம் உயர்ந்த கருத்து வெளிப்படுகிறது. தன்னிடம் இருந்த ஆயுதத்தைச் சரியான நேரத்தில் சரியான விதத்தில் பயன்படுத்தாததால் கர்ணன் வீழ நேரிடுகிறது.

**முடிவெடுக்கும் திறன்**

முடிவெடுப்பது மேலாண்மையில் முக்கியப் பணிகளுள் ஒன்று. முடிவெடுக்கும் போது எதற்கு எவ்வளவு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதில் கவனமாக இருப்பது அவசியம். முதலில் எல்லாத் தகவல்களையும் விரல் நுனியில் வைத்துக் கொண்டு முடிவெடுக்க வேண்டும் என்பதே பீட்டர் டிரக்கர் அளிக்கின்ற முதல் கட்டளை. (வெ. இறையன்பு,

 **ISBN Number: 978-81-986812-3-2**

இலக்கியத்தில் மேலாண்மை, ப. 283) இதை இரண்டு வகைகளில் திருவள்ளுவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஒரு பொருளின் உண்மையான இயல்பைப் பாரபட்சமின்றி அறிவது மட்டுமே மெய்யுணர்வு என்கிறார். அடுத்ததாக யார் சொன்னாலும் அது உண்மையா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும் சொல்கிறார். இவை இரண்டும் அறிவியல் சார்ந்த கண்ணோட்டத்தை முடிவெடுப்பதில் அளிக்கின்றன என்று வா.செ.குழந்தைசாமி குறிப்பிடுகிறார்.

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள், 355)**
**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்**
**அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள், 423)**

முடிவெடுப்பது மேலாட்டமாகப் பார்த்தால் எளிதாகத் தோன்றும். ஆனால் ஒரே ஒரு முடிவு ஏற்படுத்தும் விளைவுகளைப் பார்த்தால் அவை எவ்வளவு முக்கியமானவை என்பது புரியும். முடிவெடுப்பதற்கு நிறைய சிந்திக்க வேண்டும்.

நோபல் பரிசு பெற்ற ஹெர்பர்ட் சைமன் என்பவர் முடிவெடுப்பதில் மூன்று கட்டங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார்.


**ISBN Number: 978-81-986812-3-2**

1. **முதலாவது, நுண்ணறிவுச் செயல் - முடிவு எடுக்க வேண்டிய காரணங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல்**
2. **இரண்டாவது, வடிவமைக்கும் செயல் - பிரச்சினைகளைத் தீர்க்க உள்ள வழிமுறைகள்**
3. **மூன்றாவது, தேர்ந்தெடுக்கும் செயல் - அவற்றில் ஏற்ற சிறந்த நடைமுறையைத் தேர்ந்தெடுத்து அமல்படுத்துதல்.**

திருவள்ளுவர் இந்தக் கருத்தைச் சுருக்கி ஒரு குறட்பாவில் வெளிப்படுத்துகிறார்.

**வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்**
**பாத்திப் படுப்பதோர் ஆறு. (குறள், 465)**

**முடிவுரை**

**'எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்'** எனும் மதுரைத் தமிழ்நாயனார் மொழிக்கேற்ப எக்காலத்திற்கும் பொருந்தும் நூலான திருக்குறளில் மேலாண்மையியல் சிந்தனைகள் பொதிந்துள்ளதை இக்கட்டுரை வாயிலாக உய்த்துணர முடிகின்றது. மனிதவள மேம்பாடு, மேலாண்மையியல் எனும் கோட்பாடுக்குள் பொருந்தும் அத்துணைக் கருத்துக்களையும் வள்ளுவர் வரையறை என்று எதுவும் இல்லாமல் இயல்பாக மனிதனின் வாழ்வியலோடு இயைத்து வகுத்துள்ளார். மனிதன் தன்


**ISBN Number: 978-81-986812-3-2**

வாழ்வில் நிகழ்த்தும் இயல்பான செயல்பாடுகளை மேலைநாட்டார் கோட்பாடு என்று ஒன்று வகுத்து கூறியுள்ளனர். ஆனால் திருக்குறள் இதனைப் போகிற போக்கில் கடத்திச் செல்கின்றது எனில் அது மிகையாகாது.

**துணைநூற்பட்டியல்**


[1] வெ. இறையன்பு. *இலக்கியத்தில் மேலாண்மை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

[2] மு.இரவீந்திரன். *திருக்குறள் காட்டும் நிர்வாக இயல் - வணிக இயல்.* வானதி பதிப்பகம், சென்னை.

[3] கலைச்செல்வி (தொ.ஆ). *தனிப்பாடல் திரட்டு.* மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.


 **ISBN Number: 978-81-986812-3-2**

# தமிழ் இலக்கியத்தில் முருகப்பெருமான்

**முனைவர் கி. நாகேந்திரன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

## முன்னுரை

தமிழ் இலக்கியத்தில் முருகப்பெருமான் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளார். முருகனின் வழிபாடு தமிழ் வரலாறு மற்றும் மரபுகளில் ஆழமாகப் பதிந்துள்ளது. முருகப்பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இலக்கியப் படைப்புகளில் இருந்து முருக வழிபாடு வெளிப்படுத்தும் தமிழ் கலாச்சாரம், ஆன்மிகம் மற்றும் வீரம் ஆகியவற்றின் சாரத்தை இக்கட்டுரை பிரதிபலிக்கிறது.

## சங்க இலக்கியம்

கி.மு. 300 முதல் 300 கி.பி. வரையிலான தமிழ் இலக்கியம் சங்க இலக்கியம் என்று அறியப்படுகிறது. சங்க இலக்கியம் முருகப்பெருமானைக் குறிப்பிடும் ஆரம்பகால தமிழ் இலக்கியங்களில் மிக முக்கியமான ஒன்றாகும். அவைதனில் அவர் "சேயோன்" என்று குறிப்பிடப்படுகிறார். அவர் மலைகளின் (குறிஞ்சி) அதிபதியான சிவந்த தேகத்தை உடைய கடவுள் என்றும்

 **ISBN Number: 978-81-986812-3-2**

இளமை, அழகு, வீரம் மற்றும் அன்பு ஆகியவற்றின் கடவுளாகப் பெருமையாகக் கொண்டாடப்படுகிறார்.

**தொல்காப்பியம்**

தற்போதுள்ள மிகப் பழமையான தமிழ் இலக்கண நூலான "தொல்காப்பியம்" முருகனை முதன்மைக் கடவுளாகக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் நிலத்தைப் பற்றிக் கூறும்போது நிலத்தோடு தொடர்புடைய தெய்வங்களையும் இணைத்துக் கூறுகின்றார். **“சேயோன் மேய மைவரை உலகமும்…” (தொல்காப்பியம், பொருள்-அகத்திணை-05)** தொல்காப்பியம் முருகக்கடவுளின் சடங்குகள் மற்றும் வழிபாடுகளின் குறிப்புகளை உள்ளடக்கியது.

**பரிபாடல்**

பரிபாடல் தொகுப்பில் முருகனின் வீரம் மற்றும் தெய்வீகப் பண்புகளை எடுத்துரைக்கும் பல பாடல்கள் உள்ளன. இதனை முனைவர் சி. சேதுராமன் கருத்துகளும் வலுப்படுத்துகின்றன.

> **முருகப்பெருமானின் திருவிளையாடல்கள் பல பரிபாடலில் காணக்கிடக்கின்றன. பல பரிபாடல்கள் முருகன் சூரபதுமனை மாய்த்ததைக் குறிப்பிட்டுள்ளன. புராணக் கதைகளை விரித்துரைக்கும் கடுவனிளவெயினனார் சூரபதுமன் அழிவினையும் விரிவாகப்**


**ISBN Number: 978-81-986812-3-2**

**பாடியுள்ளார். முருகன் தன் 'பிணிமுகம்'என்னும் யானை மீதமர்ந்து சூரன்தங்கி வாழும் கடலுக்குச் சென்றார்; அவன்மா மரமாகுவும் மலையாகவும் மாற்றுருக் கொண்டு மறைந்தனன். கந்தவேள் தன்னுடைய வேலை எரிந்து மாவினை அழித்தார். மலையினையும் அழித்தார்; சூரனின் சுற்றத்தாரையும் அழித்தார் (பரி. 5: 12-14, 5: 7, 9: 70, 14: 18, 18: 4, 19: 10-103, 21: 8-9) (முனைவர், சி. சேதுராமன்)**

முருகனுடன் தொடர்புடைய மலைகள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள இயற்கை அழகு போன்ற இயற்கை காட்சிகளைப் பரிபாடல் தெளிவாக விவரிக்கின்றன.

**அகநானூறு மற்றும் புறநானூறு**

அகநானூறு மற்றும் புறநானூறு தொகுப்புகளில் முருகனின் போர் மற்றும் காதல் தொடர்பை வலியுறுத்தும் பல குறிப்புகள் உள்ளன.

**… முருகன் சுற்றத்து அன்ன, நின்**
**கூர்நல் அம்பின் கொடுவில் கூளியர்**
**கொள்வது கொண்டு, கொள்ளா மிச்சில்**
**கொள்பதம் ஒழிய வீசிய புலனும்… (புறநானூறு – 23, 4-7)**
**சினம் மிகு முருகன் தண் பரங்குன்றத்து,**
**அந்துவன் பாடிய சந்து கெழு நெடு வரை,**


**ISBN Number: 978-81-986812-3-2**

**இன் தீம் பைஞ் சுனை ஈரணிப் பொலிந்த**
**தண் நறுங் கழுநீர்ச் செண் இயற் சிறுபுறம்**
**தாம் பாராட்டிய காலையும் உள்ளார் (அகநானூறு - 59, 11-15)**

போர் மற்றும் காதல் விவகாரங்களில் தன் பக்தர்களுக்கு வெற்றியைத் தரும் கடவுளாக முருகன் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

**பக்தி இலக்கியம்**

பக்தி இலக்கியம் 7ஆம் மற்றும் 12ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் செழித்தோங்கியது. பக்தி இலக்கியம் முருகனுக்கு ஏராளமான பக்தி பாடல்களை உள்ளடக்கியது ஆகும். இந்தக் காலகட்டம் அதிகமான தமிழ் இலக்கியப் படைப்புகளை உருவாக்கியது.

**திருப்புகழ்**

முருகனின் திருவருளைப் பற்றிப் பாடும் *திருப்புகழ்* 15ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் என்ற புலவரால் இயற்றப்பட்டதாகும். *திருப்புகழ்* முருகனைப் போற்றும் ஏராளமான பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் ஆழ்ந்த பக்திக்காக அறியப்படுகின்றன.

**ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!**
**ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!**
**கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!**
**குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!**

 **ISBN Number: 978-81-986812-3-2**

**மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!**
**வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!**
**ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்!**
**ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!**
**(திருப்புகழ்)**

இவை முருகனின் தெய்வீகச் சக்தியையும் பல்வேறு வடிவங்களையும் அறுபடை வீடுகளையும் பற்றி விவரிக்கின்றன.

**கந்த ஷஷ்டி கவசம்**

முருகனுக்குக் கந்த சஷ்டி விழாவின் போது பாடப்படும் பக்திப் பாடல் கந்த சஷ்டி கவசம் ஆகும். இக்கவசம் நோய் மற்றும் சித்தப்பிரம்மை போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு கொடுக்கும் கவசமாகும்.

**துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில் பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும் (கந்த ஷஷ்டி கவசம், ப. 1)**

இக்கவசம் முருகனிடம் சரணடைவதைப் பிரதிபலிப்பதோடு முருகனின் பாதுகாப்பையும் ஆசீர்வாதத்தையும் கோருகிறது.

**காவிய இலக்கியம்**

முருகன் தமிழ் இதிகாச இலக்கியங்களிலும் முக்கிய இடத்தைப் பெறுகிறார். தமிழ் இலக்கிய

 **ISBN Number: 978-81-986812-3-2**

இதிகாசங்களில் முருகப்பெருமான் வானுயரப் போற்றப்படுகிறார். அவரது தெய்வீக அற்புதங்கள் அவற்றில் விரிவாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**கந்த புராணம்**

கந்த புராணம் 14 ஆம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதியது ஆகும். முருகனின் பிறப்பு, அசுரர்களுடன் நடந்த போர் மற்றும் அவரது திருமணங்களின் கதையைக் கந்த புராணம் விவரிக்கிறது.

> **மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி**
> **ஏவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி**
> **மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்**
> **சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி. (கந்த புராணம், 2 - கடவுள் வாழ்த்து, சுப்பிரமணியர் காப்பு (மூவிரு முகங்கள்) 12)**

முருகப் பக்தர்களுக்கு அவரது வீரத்தையும் தெய்வீக அருளையும் சித்தரிக்கும் நூலாக கந்த புராணம் விளங்குகிறது.

**பெரிய புராணம்**

பெரிய புராணம் 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரால் எழுதப்பட்டது. இந்நூல் அறுபத்திமூன்று


**ISBN Number: 978-81-986812-3-2**

நாயன்மார்களின் (சைவ துறவிகள்) வாழ்க்கையை விவரிக்கிறது. முருகன் அறுபத்திமூவர் வாழ்வில் பல இடங்களில் குறிப்பிடப்படுகிறார். இது சைவ மரபு மற்றும் இலக்கியங்களில் அவரது முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது.

**நவீன தமிழ் இலக்கியம்**

தமிழ் கவிஞர்கள் மற்றும் நவீன எழுத்தாளர்கள் முருகனைப் பற்றிப் பாடியும் எழுதியும் அகம் மகிழ்ந்து உள்ளனர். இது தமிழ் கலாச்சாரம் மற்றும் ஆன்மீகத்தில் அவரது நீடித்த இருப்பைப் பிரதிபலிக்கிறது.

**சுப்பிரமணிய பாரதி**

மகாகவி சுப்பிரமணிய பாரதி முருகனைப் பற்றி பல கவிதைகளை இயற்றினார். அவர் முருகனைத் தமிழர் அடையாளம் மற்றும் சுதந்திரத்தின் அடையாளமாகச் சித்தரித்தார்.

**வருவாய் மயில் மீதினிலே**
**வடிவே லுடனே வருவாய்!**
**தருவாய் நலமும் தகவும் புகழும்**
**தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா) (முருகன் பாட்டு, 1-4)**

பாரதி முருகனை இளமை மற்றும் ஆற்றல் மிக்க தெய்வமாகச் சித்தரித்து தைரியத்தையும் தேசபக்தியையும் இப்பாடலில் தூண்டுகிறார்.


**ISBN Number: 978-81-986812-3-2**

## தமிழ் இலக்கியத்தில் முருகன்

தமிழ் இலக்கியத்தில் முருகன் பெரும்பாலும் உன்னத அடையாளத்துடன் சித்தரிக்கப்படுகிறார். முருகன் என்றென்றும் இளமையாகவும் அழகாகவும் மதிக்கப்படுவது தமிழ் கலாச்சாரத்தின் துடிப்பான மற்றும் ஆற்றல்மிக்க தன்மையைக் குறிக்கிறது. அவர் போர் தெய்வமாகவும், தீமைக்கு எதிரான போராட்டத்தையும் மேற்கொண்டவராகக் காட்சியளிக்கிறார். தமிழ் கலாச்சாரத்தில் ஞானத்தின் மீது வைக்கப்பட்டுள்ள உயர் மதிப்பைப் பிரதிபலிக்கும் ஒரு ஆசானாகவும், அறிவின் கடவுளாகவும் அவர் காணப்படுகிறார். வள்ளி மற்றும் தெய்வானை உடனான அவரது திருமண உறவுகள் தெய்வீக அன்பையும் குடும்பத்தையும் குறிக்கிறது. முருகன் மலைதனின் தலைவனாகவும் காவலனாகவும் சித்தரிக்கப்படுகிறார்.முருகனது வாழ்வு ஆன்மீகம் மற்றும் அன்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. பெரும்பாலும் மலைகள் மற்றும் இயற்கை அழகுடன் தொடர்புடைய முருகனின் காட்சி, மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான இணக்கமான உறவைக் குறிக்கிறது.

## முடிவுரை

தமிழ் இலக்கியம் முருகனை இளமை, வீரம், ஞானம் மற்றும் அன்பு ஆகியவற்றின் தெய்வமாகப்


ISBN Number: 978-81-986812-3-2

பிரதிபலிக்கிறது. பண்டைய சங்கக் கவிதைகள் முதல் நவீன இலக்கியப் படைப்புகள் வரை, தமிழ்நாட்டின் ஆன்மீக மற்றும் பண்பாட்டு நெறிமுறைகளை உள்ளடக்கி முருகனைப் பற்றிய கவிதைகள் தொன்மங்களாக வலம் வந்து கொண்டு உள்ளது. முருகன் பாடல்கள், காவியங்கள் மற்றும் நவீன பாடல்கள் தமிழ் இலக்கிய பாரம்பரியம், தமிழ் ஆன்மீகம் மற்றும் தமிழ் கலாச்சார அடையாளத்தை வளப்படுத்துகிறது. தமிழ் இலக்கியம் முருகனது வழிபாட்டைப் பல நூற்றாண்டுகளாகத் துடிப்பாகவும் பொருத்தமானதாகவும் வைத்திருக்கிறது.

**துணைநூற்பட்டியல்**


[1] அருணகிரிநாதர். *ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த திருப்புகழ்த் திரட்டு*. திருப்புகழமிர்தம் காரியாலயம், சென்னை, 1957.

[2] இளம்பூரணார், (உரை). *தொல்காப்பியம் - பொருளதிகாரம்* அகத்திணை. மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை - 600108.

[3] சி. சேதுராமன், *பரிபாடலில் முருகன் வரலாறு*. **மார்ச் 5, 2010, https://old.thinnai.com/**

[4] செயபால், இரா. (உ.ஆ). *அகநானூறு (தொகுதி – 1, 2)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.


 **ISBN Number: 978-81-986812-3-2**

[5] பாரதியார். *முருகன் பாட்டு, பாரதியார் பாடல்கள்.* இந்து பதிப்பகம், 2010.

[6] முனைவர் இரா. சாரங்கபாணி. *புறநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98.

[7] ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார். *கந்த புராணம்,* 2 - கடவுள் வாழ்த்து, சுப்பிரமணியர் காப்பு (மூவிரு முகங்கள்) 12),

[8] *ஸ்ரீ முருகன் துதிமாலை,* (ஸ்ரீ தேவராய சுவாமிகள். *கந்தர் சஷ்டி கவசம்*). கீதா பிரஸ், கோரக்பூர், 2012.

 **ISBN Number: 978-81-986812-3-2**

# தற்காப்புக் கலை வளரி

**முனைவர் கா. பிரேமா,** உதவிப்பேராசிரியர், முதுகலை தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

## முன்னுரை

ஆதிகால மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள கூர்மையான கற்களை ஆயுதமாகப் பயன்படுத்தினான். காலம் செல்லச் செல்ல இரும்பை உருக்கி ஆயுதம் கண்டறிந்தான். தமிழர்களின் ஆயுதங்களில் குறிப்பிடத்தக்கவை வளரி. இது மரத்தாலும், இரும்பாலும், தந்தத்தாலும் செய்யப்பட்டுள்ளது. வேட்டைக்காகவும், தங்களின் பாதுகாப்பிற்காகவும் பயன்படுத்தினர். பின்னர் போர்க் காலங்களில் போர்க் கருவிகளில் வளரியின் பங்கு இன்றியமையாததாக மாறியது. வளரி தமிழகத்தில் பயன்படுத்தி வந்த ஒரு எறி ஆயுதம். வளரி என்ற ஆயுதம் வீரத்தின் குறியீடு, விசையின் குறியீடு, ஆங்கிலேயர்களின் படையை நடுங்கச் செய்த போர்முறையின் குறியீடு. நமது கலாச்சாரம், பண்பாடு, வீரம் முதலியவை திரைப்படங்களில் எடுக்கப்பட்டால் மட்டுமே நமது நினைவுகளில் உள்ளது எனலாம்.

## வளரி

வளரியை வளைதடி, திகிரி, பாறாவளை,

 **ISBN Number: 978-81-986812-3-2**

சுழல்படை, படைவட்டம், கோலெறி என்று அழைத்தனர். முதலில் கால்நடைகளை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்தினர். வளரியைப் போர்களில் பயன்படுத்த ஆரம்பித்தனர். வளரி வீசும் போது ஒரு சுழல் கொடுக்கப்பட்டு காற்றின் மீது சீவிச் சென்று இலக்கைத் தாக்கக் கூடியது. வளரி காற்றில் வேகமாகச் சுழன்று இலக்கைத் தாக்கிவிட்டு எறிந்தவரிடம் திரும்ப வந்து சேர்ந்து விடும். திரும்ப வரும் வளரி ஆபத்தானது. எறிந்தவரைத் தாக்கவல்லது. எனவே எறிந்தவர் இதனைக் கவனமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். வளரியைக் கையாளும் திறமையும் உருவாக்கும் நுண்ணறிவையும் நம் பழந்தமிழ்ச் சமூகம் பெற்றிருந்தது.

**பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் நம் இந்திய நாட்டை அடிமைப்படுத்த துப்பாக்கியைப் பயன்படுத்தினர். அதைக் கண்டு தேசமே பயந்த வேளையில் தமிழரின் வளரியைக் கண்டு ஆங்கிலேயர் நடுங்கினர். வளரி சுழற்றுபவர்களைத் தேடி அழித்தனர். அவ்ஆயுதத்தைப் புதையுறச் செய்தனர். தமிழினத்தின் வரலாற்றில் வளரி வீரத்தின் குறியீடு. அதுமட்டுமல்லாது தமிழர்களின் அறிவுத்திறனுக்குச் சிறந்த**


**ISBN Number: 978-81-986812-3-2**

**சான்றாகவும் திகழ்கின்றது. (சு.வெங்கடேசன் கதைகளின் கதை ப-12)**

பலநாடுகளில் தங்களது ஆயுதங்களை மறவாது தற்காப்புக் கலைகளாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால் நமது தற்காப்புக் கலையாக விளங்கிய வளரியை வெறும் கண்காட்சிப் பொருளாக மட்டும் பயன்பாட்டில் வைத்துள்ளோம்.

**பூமராங்-வளரி**

செவ்விந்தியர்கள், ரோமானியர்கள், எகிப்தியர்கள் பூமராங்கைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். ஆஸ்திரேலிய குடியினர் வேட்டையாடுவதற்காகவும், விளையாட்டிற்காகவும், பொழுது போக்கிற்காகவும் பூமராங்கைப் பயன்படுத்தி வந்துள்ளனர். மரம் மற்றும் எலும்புகளால் செய்யப்பட்ட பூமராங் குறிப்பிட்ட காற்றியக்கவியல் பண்புகளைக் கொண்டது. இது ஆஸ்திரேலியாவின் சின்னமாகவும் கருதப்படுகிறது. பூமராங் ஆயுதம் அல்ல ஒரு விளையாட்டு சாதனம் என்கின்றனர்.

கங்காரு வேட்டைக்கு பூமராங் பயன்படுகிறது என்கின்றனர். அதாவது பூமராங்கை வீசி கங்காரு போன்ற பெரிய விலங்கை வீழ்த்துவது என்பது இயலாத காரியம். அதாவது பூமராங்கை வீசி கங்காருவை வேட்டைக்காரர்கள் பக்கம் விரட்டி விடுவர். கங்காரு

 **ISBN Number: 978-81-986812-3-2**

பயந்து நிலைகுலைந்து விடும். அப்போது வேட்டைக்காரர்கள் சுலபமாக அதனைப் பிடித்து விடுவார்கள். முறையான பயிற்சி இருந்தால் பூமராங் வீசியவர் கைக்கே திரும்ப வரும்படி செய்யலாம். காற்று வீசும் திசைக்கு எதிராக 45டிகிரியில் வீசப்படும். காற்றைக் கிழித்துக் கொண்டு செல்லும். காற்று அதிகமாக இருந்தால் பூமராங் நிலை தடுமாறி விழுந்து விடும்

**தமிழ் இலக்கியங்களில் வளரி**

வளரியைப் பற்றிய குறிப்புகள் கலித்தொகை, புறநானூறு, நற்றிணை, போன்ற இலக்கியங்களில் காணக்கிடைக்கிறது.

கலித்தொகையில் திருமாலின் ஆயுதமாக வளரி சுட்டப்படுகிறது.

> **மல்லரைமறம் சாய்த்த மலர்த்தண்தார் அகலத்தோன்**
> **ஒல்லாதார் உடன்றுஓட உருத்துஉடன் எறிதலின்**
> **கொல்யானை அணிநுதல் அழுந்திய ஆழிபோல்**
> **கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலின்"**
> **(கலித்தொகை, 134)**

சுதர்சனம் என்னும் சக்ராயுதத்தை வைத்துள்ளவர் திருமால் அவரின் சக்கரம் அரக்கர்களை அழித்து விட்டு சுழன்று திரும்ப அவரிடமே வந்து சேரும். என்பது குறித்துச் சங்க நூலான கலித்தொகை சுட்டுகிறது. அது

 **ISBN Number: 978-81-986812-3-2**

போல வளரியும் குறியைத் தாக்கிவிட்டு வளரி எறிந்தவரிடமே வந்து சேரும். புறநானூற்றில் வளரி குறித்த செய்தி,

**பொய்யா கியரோ பொய்யா கியரோ**
**பாவடி யானை பரிசிலர்க்கு அருகாச்**
**சீர்கெழு நோன்றாள் அகுதைகள் தோன்றிய**
**பொன்புனை திகிரியின் பொய் யாகியரோ. (புறநானூறு233)**

அகுதை என்னும் மன்னன் பரிசிலர்க்கு யானைகளைப் பரிசாக வழங்குவான். அவனிடம் வலிமை மிகுந்த சக்கரப்படை இருந்தது என்ற செய்தி பொய்யாகியது என்று வெள்ளெருக்கிலையார் குறிப்பிடுகிறார். இதில் **திகிரி** என்பது வளரியைக் குறிப்பிடுகிறது.

**குறுங் கோல்" எறிந்த நெடுஞ் செவிக் குறு முயல்**
**நெடு நீர்ப் பரப்பின் வாளையொடு உகளுந்து" (புறநானூறு 339)**

ஆனிரை மேய்க்கும் கோவலர் பூப் பறிக்கும்போது அங்கு மேயும் முயலை நோக்கி **குறுங்கோல்** என்னும் வளரியை வீசுவர். அந்த முயல் தப்பி ஒடி அங்குள்ள பரந்த நீர்நிலையில் வாளைமீனோடு சேர்ந்து புரண்டு துள்ளும். **"எரிகோல் அஞ்சா அரவின் அன்ன " (புறம்.89-5)** எனும் அடியில் உள்ள எரிகோல் என்பது இங்கே வளரியைச் சுட்டுகின்றது.


**ISBN Number: 978-81-986812-3-2**

**புறவு அணி கொண்ட பூ நாறு கடத்திடை,**
**கிடின் என இடிக்கும் கோல் தொடி மறவர்**
**வடி நவில் அம்பின் வினையர். (நற்றிணை-48)**

முல்லை நிலம் பூத்து மணம் பரப்பிக்கொண்டிருக்கும் காட்டுவழி. இடி போன்ற முழக்கத்துடன் வழிப்பறி மறவர்கள் அங்குத் தோன்றுவர். மின்னல் வேகத்தில் தாக்கும் **கோலை** உடையவர். கூர்மையான அம்பு எய்வதில் அவர்கள் வல்லவர்கள்.

**முத்து விஜயரகுநாதன்**

முத்து விஜயரகுநாதன் வளரியை ஆளுதலில் மிகக் கைதேர்ந்தவராவர். கருதிய குறியினைத் தப்பாமலெறிதலும் எறிந்த வளரியை மீண்டும் தன்கைக்கு வரச் செய்தலும் இவருக்கே சிறந்த பெருஞ் செயல்களாயிருந்தன.

> **சேதுபதிகளை வடிவமைத்த பண்டையக் கல்லுருவங்களிலெல்லாம் இடையிற் சுற்றிய வீரக்கச்சையில், வளரியே செருகப்பட்டுள்ளது. இதுவே இவர்க்குரிய பேரடையாளமாவது. இவரது வீரக்கழல் சேமத்தலை எனப் பெயர் சிறக்கும். இது தம்மால் வெல்லப்பட்ட பகைவனது தலையே தமக்குச் சிறந்த தாளணியாக்கிக் கொண்டு விளங்கியதை குறிப்பதாகும்.**


**ISBN Number: 978-81-986812-3-2**

**(இராகவையங்கார்.இரா., தமிழகக் குறுநில வேந்தர்கள், 1994, ப. 121)**

சேதுபதிகள் முற்காலத்து எட்டன் ஒருவனுடன் போர் புரிந்து வெற்றி அடைந்து அவனது தலையை தனது வீரக்கழலில் அணிந்தனர் என்ற செய்தி மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் பாடிய தளசிங்க மாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராமேசுவரத்தைச் சுற்றியுள்ள பிரகாரங்களிளெல்லாம் சேதுபதிகளின் கல் உருவங்களும் சேமத்தலையுமே இடம்பெற்றுள்ளன.

சித்திரை திருவிழாவில் கள்ளழகர் கையில் வளரியுடன்தான் வைகையாற்றை நோக்கிப் புறப்படுவார். பல ஆயிரம் வருடங்களாக வளரியை தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்றும், வளரியின் தாயகம் தமிழகம் என்பதை பல சங்க இலக்கியச் சான்றுகள், வழி அறிய முடிகிறது. இதுவரை கிடைத்த வளரிகள், அதையெல்லாம் தாண்டி வளரியுடன் இருக்கும் வீரர்களின் நடுகற்கள் அதற்குச் சாட்சியாக இருக்கின்றன.

**வீரத்தேவர் கழுவத் தேவர்**

கிபி 1311ல் பாண்டியர்களை வீழ்த்த டெல்லி சுல்தானாகிய அலாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக்கபூர் மதுரைக்கு பெரும்படையுடன் வருகிறார். அப்படி மாலிக்கபூர் மதுரைக்குள் நுழையும் முன் எல்லையில் கள்ளர் குடியின் வீரத்தேவர், கழுவத்தேவர் இருவரும்

 **ISBN Number: 978-81-986812-3-2**

மாலிக்கபூர் படையுடன் சண்டையிட்டு உயிர் தியாகம் செய்துள்ளனர். அப்படி உயிர் தியாகம் செய்த இருவருக்கும், அந்த வட்டாரத்தை சேர்ந்த அனைத்து சமூக மக்களும் நடுகல் எடுத்து கடவுளாக வணங்கி வருகின்றனர். அந்த நடுகல்லில் வீரத்தேவர், கழுவத்தேவர் இருவருக்கும் வலது கையில் வாளும், இடது கையில் வளரியும் வைத்துள்ளனர். இன்றும் மதுரை அருகே கீழக்குயில்குடி சென்றால் அங்குள்ள மலையடி அய்யனார், கருப்பு கோவிலில் இவர்களுடைய நடுகல்லை பார்க்கலாம்.

**படம் -1 - வீரத்தேவர், கழுவத்தேவர் நடுகல்**




### போருக்குப் பயன்பட்ட வளரி

போருக்குப் பயன்பட்ட வளரியானது பட்டையான வடிவத்தில் துள்ளிய வடிவமைப்போடு,

 ISBN Number: 978-81-986812-3-2

கூர்மையான வெளிப்புறங்களை கொண்டிருந்தது. அது மட்டுமல்லாது போர் வீரர்கள் வளரியை தங்களது கொண்டையில் சொருகி வைத்திருப்பார்கள். தக்க சமயத்தில் அதை எடுத்து கனமான முனையை கையில் பிடித்து சுழற்றி விரைவாக இலக்கை நோக்கி எறிவார்கள். புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஆண்ட தொண்டைமான் மன்னர்களுடைய படையில் வளரி போர்க் கருவியாகப் பயன்பட்டு வந்துள்ளது. வளரிக்காகத் தனிப்படையே இருந்ததாம். ஏராளமான வளரிகளை இவர்கள் ஆயுதக் கிடங்கில் சேமித்து வைத்திருந்தார்கள்.

கிபி 1650களில் திருமலை நாயக்கர், பாண்டிய மன்னர்கள் முற்றிலும் அழிந்த காலத்தில் மதுரையை தனது முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வர நினைக்கும் போது. மதுரை எல்லை அரணில் வாழ்ந்த கள்ளர் பெருமக்கள் நாயக்கருக்கு எதிராக கலகம் செய்தனர். அப்போது திருமலை நாயக்கரால் அவர்களை கட்டுப்படுத்த முடியாத போது திருச்சி நாயக்கரிடம் உதவி கேட்டு வீரையன் சேர்வை மூலமாக ஒழிக்க நினைத்தார். இதனை பற்றி *மதுரை வீரன் அம்மானை* விளக்கும் போது வீரையன் சேர்வையை ஆனையூர் பத்து நாட்டு தனிக்காட்டு தன்னரசு கள்ளர் படைகள் வளரியும், வேலையும் வைத்து சண்டையிட்டனர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

 **ISBN Number: 978-81-986812-3-2**

**முத்தரையர்கள்**

வளரி சுழற்றுவதில் வீரரான வீரமல்லன் முத்தரையன். கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனை காண அவரின் சோனாதிபதியாக இருக்கும் சிம்ம பெரும்பிடுகு முத்தரையர் தம் குலத் தோன்றலான வீரமல்லனை அழைத்துச் செல்கிறார். மூவரும் சந்தித்துப் பேசிய பிறகு மேல் மாடத்திற்குச் செல்கிறார்கள். அங்கிருந்து பார்ப்பதற்கு வைகை நதி ஓடுவது தெரிந்தது. “கூட்டங் கூட்டமாக செங்கால் நாரைகள் பறந்து சென்றன. அதைப் பார்த்த மன்னர் உனக்கு நன்றாக வளைஎறி வீசத் தெரியும் என்று முத்தரையர் சொன்னார் இந்த நாரைகளில் ஒன்றை உன் வளைஎறியால் வீழ்த்துவாயா வீரமல்லா என்றார் பாண்டியர். இதைக் கேட்டதும் முத்தரையர் வளைஎறியை வந்து வீரமல்லரிடம் கொடுக்க மன்னா பறக்கும் நாரைகளில் முதல் நாரையா! இடையில் உள்ளவற்றில் ஒன்றா! அல்லது கடைசியில் உள்ள நாரையா! என்று கேட்டார்.

பத்து பதினைந்து நாரைகளில் ஏதாவது ஒன்றை வீழ்த்துவது என்றாலே கடினம் என்பதை அறிந்த சுந்தர பாண்டியர் திடுக்கிட்டு முதல் நாரை என்றார். வீரமல்லன் சுழற்றி விட்ட சின்னஞ்சிறு வளைஎறி விர்ரென்று மேலே வட்டமிட்டுச் சென்றது. அது புறப்பட்டது ஒரு திசை,

 ISBN Number: 978-81-986812-3-2

திரும்பியது ஒரு திசை. மூன்றாவது திசையில் பறந்து கொண்டிருந்த முதல் நாரை தலைகுப்புறக் கீழே விழுந்தது. சுந்தர பாண்டியர் முத்தரையரிடம் வீரமல்லன் வல்லவன் தான் என்று பெருமிதத்துடன் கூறினார்". என்பதை *வேங்கையின் மைந்தன்* புதினம் வழி அறிய முடிகிறது. இன்றளவும் முத்தரையர், அம்பலக்காரர், வலையர், வலையமார்கள் வாழும் பகுதிகளில் வளரி ஆயுதத்தை காணமுடிகிறது. முத்தரையர் குலதெய்வ வழிபாட்டில் முன்னோர்களின் வேட்டை மற்றும் காவல் ஆயுதமாக வளரியை வைத்து வழிபடுகின்றனர்.

**பெருங்காமநல்லூர் கலகம்**

பெருங்காமநல்லூர் மக்கள் ஆங்கிலேயர் கொண்டு வந்த கைரேகை சட்டத்தை எதிர்த்துப் போராடினர். "அப்போராட்டத்திற்கு இம்மக்கள் பயன்படுத்திய வலிமையான ஆயுதம் வளரி ஆகும். எனவே, மக்கள் வளரியை கோவில்களில் வைத்துப் பாதுகாத்தனர். துப்பாக்கி, பீரங்கி என்று நவீன ஆயுதங்களை வைத்திருந்த ஆங்கிலேய அரசு வளரியைக் கண்டு அஞ்சி நடுங்கினர். இந்தப் போராட்டத்தை நினைவுகூரும் வகையில் பெருங்காமநல்லூரில் நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது.

**மருது சகோதரர்கள்**

சிவகங்கையை ஆண்ட மருதுபாண்டியர்கள்


**ISBN Number: 978-81-986812-3-2**

வளரியைப் பயன்படுத்துவதில் சிறந்தவர்களாக இருந்தனர். இம்மன்னர்களின் தளபதியான போர்படை தளபதியும் வளரி எறிவதில் வல்லவர். கிழக்கிந்திய கம்பெனியில் பல முக்கியப் பொறுப்புகளில் இருந்த கர்னல் ஜேம்ஸ் வெல்ஸ் தனது ராணுவ நினைவுகள் என்னும் புத்தகத்தில் வளரி குறித்து எழுதியுள்ளார். "சிவகங்கை சீமையுடன் கம்பெனி நல்லுறவுடன் இருந்த காலத்தில் மருது சகோதரர்களிடம் தான் வளரி வீசக் கற்றுக் கொண்டதைக் குறிப்பிட்டுள்ளார். திறமையுடையவர்கள் இவ்ஆயுதத்தை வீசினால் 100 கஜ தூரத்திற்குச் செல்லும் என்றும் இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் என்றும் பதிவிட்டுள்ளார்". ஆங்கிலேய அதிகாரிகள் தமிழகத்தில் அதிகம் அஞ்சிய ஒரு ஆயுதம் என்றால் அது வளரி என்றே கூறலாம்.

**திருமணச் சடங்கில் வளரி**

பொதுவாக தமிழ் சமூகத்தில் உள்ள இனத்தவர்கள் திருமணம் நிச்சயிக்கும் போது தட்டு மாற்றிக் கொள்வது வழக்கம். அப்படி அவர்கள் தட்டு மாற்றி கொள்ளும் போது தட்டில் வெற்றிலை, பாக்கு, வாழை, புடவை, வேட்டி, சட்டை, குங்குமம் வைத்து இருவீட்டார்களும் தட்டை மாற்றி கொள்வர். ஆனால் நாட்டார் கள்ளர்களாகிய சிவகங்கை ஏழுகிளை கள்ளர் நாட்டார்கள் தங்களது திருமண நிச்சயத்தின் போது

 **ISBN Number: 978-81-986812-3-2**

திருமண வீட்டார்கள் வளரியை மாற்றிக் கொண்டு இருந்திருக்கிறார்கள். இது அவர்களின் பண்பாட்டின் அடையாளமாக இருந்துள்ளது. இதுபோக “send the valari and bring the bride” அதாவது வளரியை அனுப்பி பெண்ணை கொண்டு வா என்று பெண் கேட்டுள்ளனர்.

கி.பி. 1710ல் விஜய சேதுபதி மன்னர் தனது மகள் அகிலாண்டேஸ்வரியின் திருமணப் பரிசாக தன் குலமரபு ஆயுதமான வளரியை அனுப்பி வைத்ததாக கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கண்டதேவி செம்பொன்மாரி நாதர் (சொர்ணமூர்த்தி ஈசுவரர்-பிற்காலப் பெயர்) கோயில் தேரோட்டத்தின் போது கள்ளர்கள் வளரி வீசும் போட்டி நடைபெறும். ஒருசிலர் வீசும் வளரி அந்த பெரிய குளத்தையே ஒரு சுற்று சுற்றிவரும். அந்த அளவிற்கு வளரி வீசுவதில் திறன் உள்ளவர்கள் வாழ்ந்துள்ளார்கள்.

எட்கார் தர்ஸ்டன் எழுதிய தென்னிந்தியாவின் குலங்களும் குடிகளும் என்ற நூலில் **“தென்தமிழகத்தில் கள்ளர் மற்றும் மறவர் குடியினரின் குடும்பங்களில் வளரி முக்கிய பங்கு வகிக்கிறது என்கிறார். கள்ளர்களின் திருமணத்தின் போது மணமகனும் மணமகளும் இல்லத்தை அடைந்தவுடன் இருகுடும்பத்தினரும் வளைதடியை மாற்றிக் கொண்ட பின் இல்லற விருந்து நடைபெறுகிறது. வளைதடியை அனுப்பி மணமகனை**


ISBN Number: 978-81-986812-3-2

**அழைத்து வா என்பது இன்றளவும் மக்கள் வழக்கில் உள்ளது".** பிரிட்டிஷ் தொல்லியல் வல்லுனரான ராபர்ட் புரூஸ் ஃபுட் மதுரை மாவட்டத்தில் வளரியின் பயன்பாட்டைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**சோழர்களின் எரிபடை**

புதுக்கோட்டை பகுதியில் சமீபகாலம் வரை உபயோகத்தில் இருந்த ஈட்டி, வில், அம்பு, வளரி, போர் வாட்கள், பட்டாக்கத்திகள், சங்கிலி, போர் உடைகள், பீரங்கிகள் அவற்றில் உபயோகப்படுத்தப்பட்ட குண்டுகள் அருங்காட்சியத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. வளரித்தடி என்னும் வளரி பழங்கால ஆயுதங்களில் ஒன்றாகும். இவ்வாயுதம் தாங்கிய படை எரிபடை என சோழர் காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. புதுக்கோட்டை பகுதியில் வளரி உள்ளது என்பதனையும் சோழர் காலத்தில் 'எரிபடை' என்ற ஒன்று இருந்ததாகவும் - டாக்டர் ஜெ. ராஜாமுகமது புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் வளரி**

தற்போது வளரி வைத்திருக்கும் ஒரே பிரிவினராக வலையர் மக்களே திகழ்கின்றனர். டாக்டர் ராஜா முகமது அவர்கள் குறிப்பிடும் சோழர்கால எரிபடையினராக இவ்வலையர்களையே குறிக்கும் வகையாக உள்ளது.

 **ISBN Number: 978-81-986812-3-2**

மரத்திலும் இரும்பிலும் தந்தத்திலும் செய்து பயன்படுத்தப்பட்ட வளரி எரிகருவியின் வகைகளை சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்திலும், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் சில அருங்காட்சியகங்களிலும் காட்சிப்படுத்தியுள்ளார்கள்.

**தொண்டைமான் மரபினர்**

வளரியை யார் கடைசிவரை வைத்திருந்தனர், எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை எழுதி வைத்தது புதுக்கோட்டை தொண்டைமான் மரபினர் என்பது ஆணித்தரமான உண்மையே. ஏனென்றால் புதுக்கோட்டை அரசர்களான தொண்டைமான்கள் வளரியை எப்போதும் வைத்திருந்தார்கள் என்று ஆவணமாக உள்ளது.


**படம் - 2 – தொண்டைமான்கள் பயன்படுத்திய வளரி**



 **ISBN Number: 978-81-986812-3-2**

தொண்டைமான் அரசர்களின் பல ஆயுதங்களில் ஒரு வளரி மட்டும் எப்போதும் வைத்திருப்பார்கள், அந்தளவுக்கு வளரியின் பாரம்பரியம் தொண்டைமான் வம்சாவழியினருக்கு வழி வழியாக இருந்துள்ளது. இராமச்சந்திர தொண்டைமான் இராஜா யானை தந்தத்தில் செய்த 2 வளரியை பரிசாக அளித்துள்ளார். ஒன்று 11473cm பரப்பளவு கொண்ட ஒருபுறம் குவிந்திருக்கும் வளரி மற்றொன்று 11534cm பரப்பளவு கொண்ட இருபுறமும் குவிந்த மேற்பரப்புகள் மற்றும் பரந்த முடிவும் இருக்கும். அது சென்னை மியூசியத்தில் இன்றும் உள்ளது.

**படம் - 3 – இராமச்சந்திர தொண்டைமான் இராஜா பரிசாக அளித்தது**




 **ISBN Number: 978-81-986812-3-2**

சின்ன மருது காளையார்கோவிலின் கோபுரத்தை பெரிதாக கட்டியபோது வைத்தியலிங்க தொண்டைமானை அழைத்து கோபுரம் எப்படி என கேட்க அதற்கு தொண்டைமான் ஒரு பனைமரம் அளவே உள்ளது என வேடிக்கையாகக் கூறினார். அதற்கு மருது என்ன பனைமரம் அளவா எப்படி சொல்கிறீர்கள் என வினா எழுப்ப. ஒரு வளரியை வாங்கி தான் பனைமரம் அளவு வளரி வீசுவேன் என வைத்தியலிங்க தொண்டைமான் வளரியை கோபுரத்தின் மேல் வீசினார். வளரி கோபுரத்தைத் தாண்டிச் சென்றது என ஒரு சம்பவம் தெரிவிக்கின்றது.

கிபி 1886 ல் புதுக்கோட்டை சமஸ்தானத்தில், மன்னர் ராமச்சந்திர தொண்டைமான் முன்னிலையில் “வளரி வீசும் விழா” நடத்தப்பட்டுள்ளது.

**படம் - 4 - வளரி வீசும் விழா**




*The first gubernatorial visit to the Capital,* 1886.* His Excellency the Right Honorable Sir Mountstuart Elphinstone Grant Duff, G. C. I. E., Governor of Madras, was the first Governor to visit the Râja in his capital. His Excellency arrived a little before noon on Tuesday, the 2nd of February, 1886, and left on the afternoon of Thursday the 4th. A grand Darbar was held on the occasion. A levee was held, at which the Râja presented to His Excellency all the members of his family, officers and Sardârs of the State, and distinguished citizens of the Town. There was the usual display of fireworks, *etc.* His Excellency also witnessed a display of boomerang-throwing.

## ரோஜர் பெரி கருத்து

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் உயிரியல் துறை சார்பில் தமிழ் மக்களிடம் வளரிக் கலை பயன்பாடு

 **ISBN Number: 978-81-986812-3-2**

என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பூமராங் என்றழைக்கப்படும் வளரிக்கலையில் உலகச் சாம்பியன் பட்டம் பெற்ற ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த ரோஜர் பெரி அவர்கள் கூறியதாவது. பூமராங் என்றழைக்கப்படும் வளரி ஆஸ்திரேலிய பழங்குடியினரான அபாரிஜின்கள் இனத்தவரின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. இவர்கள் வேட்டைக்காக 7 வடிவம் கொண்ட தடிகளை பயன்படுத்தியுள்ளனர். இவற்றை பயன்படுத்தி ஈமுக்கோழிகள் உள்ளிட்ட சிறிய வகை விலங்குளை வேட்டையாடி வந்துள்ளனர். மேலும் பூமராங் தடிகளைக்கொண்டு நெருப்பு பற்ற வைப்பது, தண்ணீருக்குள் உள்ள மீனை வேட்டையாடுவது போன்ற பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தியுள்ளனர்.

**படம் – 5 - ரோஜர் பெரி - மதுரை காமராசர் பல்கலைக்கழக உயிரியல் துறை மாணவிகள்**



மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் வளரி வீசுவது தொடர்பான செயல்முறை பயிற்சியில் பங்கேற்ற மாணவிகளுடன் ரோஜர் பெரி. –மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் வளரி வீசுவதை செய்து காட்டும் ஆஸ்திரேலிய வீரர் ரோஜர் பெரி

 **ISBN Number: 978-81-986812-3-2**

**சக்கந்தி கிராமத்தில் வளரி**

சிவகங்கை சக்கந்தி கிராமத்தில் வளரி ஒரு குடும்பத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்த கிராமத்தில் அரண்மனை என்று சொல்லப்படும் பனை ஓலைகளால் வேய்ந்திருந்து கோயிலாகப் பார்க்கப்படும் இராணி வேலுநாச்சியாரின் மருமகனும் மன்னருமான வேங்கை பெரிய உடையத்தேவரின் வழித் தோன்றலாக இருந்துவரும் குடும்பத்தினர் இருக்கின்றனர். மலைராஜன் என்பவர் இங்க இருந்த பழமையான ஆயுதங்கள் சிலவற்றை சிவகங்கை மியூசியத்தில் கொடுத்து விட்டோம். மரத்தாலன இரண்டு வளரி ஒரு சில வேல்கம்பு, வாள் இது மாதிரியான ஆயுதங்கள் இருக்கின்றது. அதை பொக்கிசமாக நினைக்கிறோம் என்றார்.

**படம் – 6 - சக்கந்தி கிராமத்தில் வளரி**




**ISBN Number: 978-81-986812-3-2**

**சிறுவயல் அரண்மனை**

கல்லல் அருகே உள்ள சிறுவயல் கிராமத்தில் உள்ள பழமையான ஜமீன் அரண்மனை உள்ளது. சிதலமடைந்த நிலையில் காட்சியளித்த கோட்டைச் சுவர் வாயிலாக ஜமீன் அறைக்குள் 10க்கும் மேற்பட்ட வேல் கம்பு, 2 வளரி, சுறா தண்டில் செய்த ஆயுதம், குறுவாள், பல்வேறு வடிவங்களில் கர்லாக்கட்டை, கல்லில் செய்த உடற்பயிற்சி ஆயுதம் உள்ளிட்டவைகள் இருந்தது. மருது பாண்டியர்கள் அங்கு போர் பயிற்சிகள் எடுத்துக் கொண்டு இருந்ததாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

**படம் – 7 - சிறுவயல் அரண்மனை ஆயுதக்கிடங்கில் வளரி**



**ஆய்வாளர் கார்த்திக் ராஜா**

வளரி குறித்து எட்டு ஆண்டுகளுக்கு மேல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுவரும் கார்த்திக் ராஜா அவர்கள் “வேட்டை, காவல், பறவை விரட்டுதல், போர் உள்ளிட்ட பல்வேறு முறைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. தென்


**ISBN Number: 978-81-986812-3-2**

தமிழகத்தில் மட்டும் தான் வளரி பயன்பாடு இருந்துள்ளது. வடமாவட்டங்களிலோ, கொங்கு பகுதிகளிலோ இருந்தாக ஆவணங்கள் இல்லை. வளரி 12க்கும் மேற்பட்ட பெயர்களாலும் அழைக்கப்பட்டு உள்ளன. வளரியை பயன்படுத்திய வீரர்களுக்கு நடுகல் சிலைகளும். மதுரை கருமாத்தூர் அடுத்த கோவிலாங்குளத்தில் உள்ள பட்டசாமி கோயில் இரும்பில் ஆன பல வளரியை காண முடியும். அதனை படையல் பொருளாக மக்கள் பாவிக்கின்றனர்.

பொதுவாக வளரி எறிந்த பின் நம் கைகளுக்கு மீண்டும் வரக்கூடிய ஒன்று. நமது கைக்கோ அருகிலோ மீண்டும் வரலாம். எனினும் ஒரு இலக்கை குறிவைத்து அடிக்கும் போது மீண்டும் திரும்பும் என்று சொல்ல முடியாது. விசையில் சென்று இலக்கை தாக்கும் போது அதன் திறனை இழந்துவிடும் அதனால் அங்கே விழுந்துவிடும். குறிவைத்த இலக்கை தாக்காத பட்சத்தல் மீண்டும் கைகளுக்கு வரலாம். வளரியை இனி ஆயுதமாக முன்னெடுக்காமல் விளையாட்டு போட்டியாக முன்னெடுக்க வேண்டும். அப்போது தான் அதன் அடையாளத்தை காப்பாற்ற முடியும் என்றார்.

**தற்போதைய நிலை**

வளரி தற்போது விளையாட்டாக மாறியுள்ளது. வெளிநாடுகளில் வளரி வீசும் விளையாட்டு சிறப்பாக

 **ISBN Number: 978-81-986812-3-2**

நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் இந்தியாவில் அங்கீகாரம் பெறவில்லை என்றாலும் பல்வேறு விளையாட்டு சங்கங்கள் சார்பில் வளரி வீசும் விளையாட்டுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் வேகமாக வளரி வீசுதல், துல்லியமாக வீசுதல், துரித வீச்சு என்று 8 வகையான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது இக்கலை அழியாமல் பாதுகாக்க மக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளிக்கும் வகையில் வளரி பயிற்சி முகாம் ஒரு சில தன்னார்வலர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

**துணைநூல் பட்டியல்**

[1] அகிலன். வேங்கையின் மைந்தன். தமிழ் புத்தகாலயம், சென்னை -2007.

[2] எட்கர் தர்ஸ்டன். *தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்.* தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 1986.

[3] சுப்பிரமணியன், ச. வே. *புறநானூறு.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108.

[4] புலியூர்க் கேசிகன். *நற்றிணை.* பாரி நிலையம், சென்னை-001.

[5] ராகவய்யங்கார். *தமிழகக் குறுநில வேந்தர்கள்.* பாரதி பதிப்பகம், சென்னை-017.

 **ISBN Number: 978-81-986812-3-2**

[6] இராசமாணிக்கனார், மா. *கலித்தொகை.* பூம்புகார் பதிப்பகம், சென்னை-108.

[7] வெங்கடேசன், சு. *கதைகளின் கதை*, விகடன் பிரசுரம், சென்னை, 2019.

[8] தினத்தந்தி நாளிதழ் – 15.08.2023.

[9] "கள்ளர் வம்சத்தின் வரலாறு (முக்குலத்தோர்-தேவர்) History Of Kallar Dynasty (Mukkulathor-Thevar)" https://kallarkulavaralaru.blogspot.com/2018/09/blog-post_22.html

 **ISBN Number: 978-81-986812-3-2**

# ஆற்றுப்படை இலக்கியம் காட்டும் நிலவியல் கோட்பாட்டில் திணைசார் உணவியல் முறைமை

**வெ. மாரிச்செல்வி,** முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 22212014022007, முதுகலை மற்றும் தமிழாய்வு மையம், ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர். அ. விஜயலட்சுமி,** உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வு மையம், ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

சங்க இலக்கியம் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து வகையான நிலவியலைக் கொண்டது. இத்திணைகளில் வாழும் மக்கள் மாறுபட்ட உணவியல் முறைகளைக் கொண்டவர்கள். இவர்களின் வாழ்வியலில் விருந்தோம்பல் முக்கிய இடம் பெற்றமைகிறது. கலைஞர்களின் பசியைத் தீர்க்கும் மக்களைக் காட்டும் பாடல்கள் விருந்தோம்பலின் வெளிப்பாடாக உள்ளன. உணவியல் மற்றும் உற்பத்தி முறைமைகள் திணை சார்ந்து அமைகின்றன. இனக்குழு சமுதாயத்திலிருந்து வேந்தர் சமூக தோற்றக் காலத்தில் உணவுக்கான அடையாளப்படுத்தல்கள் வேறு கோணத்தை அடைந்த


ISBN Number: 978-81-986812-3-2

தன்மையினையும் உணவு என்பதற்கான வகைப்படுத்தல்கள் அது சார்ந்த நிலவியல் மற்றும் சமைத்தலுக்கான தோற்றப்பாடுகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**நிலவியல் கோட்பாடு**

நிலவியல் என்பது சமூக அறிவியலின் ஒரு பிரிவாகும். பூமிப்பரப்பு, தட்பவெப்ப நிலை, அதன் மாற்றங்களால் நிகழும் சூழல் மாற்றம், தாவரங்கள், உயிரின வாழ்க்கை முறை, மனித வாழ்க்கை முறை அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டது.

புவிப்பரப்பின் பல்வேறு நிலவெளிகளின் இயல்பினை நிலவியல் விளக்குகிறது. மனிதர்கள் குறிப்பிட்ட நிலவெளிகளில் தொடர்ச்சியாக வாழத் தொடங்கும்போது அது சார்ந்த பழக்க, வழக்கங்களும் நடைமுறைகளும் உருவாகின்றன. அவையே பண்பாட்டுக் கூறுகளாக அறியப்படுகின்றன. இது அங்கு வாழும் மக்களின் அடையாளமாக மாறுகிறது.

**தமிழர் வாழ்வியலில் உணவு**

தமிழர் வாழ்வியல் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைகளால் அமைந்தது. இவை அனைத்திலும் உணவு என்பது பண்பாட்டின் ஒரு பகுதியாகும். இவ்வுணவினைத் தொல்காப்பியர் அகத்திணையில் குறிப்பிட்டுள்ளார். ஐந்து வகை


**ISBN Number: 978-81-986812-3-2**

நிலங்கள், அவற்றின் முதல், கரு, உரிப்பொருட்கள் பற்றிக் கூறும் பொழுது கருப்பொருள்களுள் ஒன்றாக **'உணா'** என்று உணவு குறிப்பிடப்படுகின்றது.

**தெய்வம் உணவே மாமரம்**
**புட்பறை செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப**
**(தொல்.அகத்.13 )**

என்று தொல்காப்பியர் கூறும் கருப்பொருள்களுள் ஒன்றாக உணவு இடம் பெறுகிறது. மேலும், உணவினைக் குறிக்கும் வேறு சொற்களான பெருஞ்சோற்று நிலை,பிண்டம் போன்றவற்றையும் *தொல்காப்பியம்* பதிவு செய்துள்ளது. மரபியலில்

**மெய்திரி வகையின் எண்வகை உணவின்**
**செய்தியும் வரையார் அப்பா லான (தொல்.**
**மரபியல், 623)**

என்று நெல், காணம், வரகு, இறுங்கு, தினை, சாமை, புல், கோதுமை போன்ற எட்டு வகையான உணவுகளைக் கூறுகிறார்.

குறிஞ்சியில் தொடங்கிய திணை அமைப்பானது, நீர்ப்பாசன வேளாண் நாகரிகமாகவும் தொழில் நுட்பத்தினை மையமிட்ட நாகரிகமாகவும் மாறத் துவங்கியது. இந்த படிமலர்ச்சியில் உற்பத்தி முறைகளும், மறு உற்பத்தி முறைகளும் மாறியது. இதன் காரணமாக

 **ISBN Number: 978-81-986812-3-2**

பண்டைத் தமிழரின் உணவு முறையிலும் மாற்றம் ஏற்படுகிறது.

**வர்க்கமுற் சமுதாயத்தில் உணவு**

உணவு என்பது உடலுக்கு ஆற்றலை தருவதாகும். இது சமூகத்தின் அறிவு மற்றும் தகவமைப்பு முறையாகவும் உள்ளது. தான் சார்ந்துள்ள சுற்றுச்சூழலை அனுசரித்து வாழும் தன்மை தகவமைப்பு எனப்படும். தமிழ் இலக்கியங்கள் உணவின் தேவையை எடுத்து விளக்குவதோடு அந்த உணவை மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்வது இன்றியமையாத செயல் என்று பாடல்களின் வழி பதிவு செய்கின்றன. உணவு என்பது சேகரித்தல் நிலையிலிருந்து

> **உணவு உற்பத்தி நிலைக்குச் சமுதாயம் மாற்றமடைந்தது. உணவு சேகரிக்கும் நிலையிலும் உணவு உற்பத்தி நிலையிலும் கால்நடை வளர்ப்பின் முதல் கட்டத்திலும், பயிர்த்தொழிலின் இரண்டாம் கட்டம் வரையிலும் இனக்குழுச் சமுதாய அமைப்பு நிலவியது. இதனை வர்க்க முற்சமுதாயம் (*சங்ககாலச் சமுதாயம்*, ப. 62)**

என்று சுப்ரமணியன் கூறுகிறார்.

சங்க இலக்கியம் புராதான இனக்குழுப் பண்புகளைக் கொண்ட குறிஞ்சி சமூகத்தைக் காட்டுகிறது. இச்சமூகம் கொண்டிருந்த பகுத்துண்ணும்

 **ISBN Number: 978-81-986812-3-2**

பண்பு பாதீட்டின் ஆதி நிலையாகும். இதனை, **பொருநராற்றுப்படை**, **“கடுங்கண் கானவர் கடறு கூட்டுண்ணும் (பொரு.116)** என்று கூறுகிறது. இனக்குழுச் சமுதாயத்தில் ஒவ்வொரு நாளும் அன்றைக்குத் தேவையான உணவினைப் பெறுவதைக் கூடிப்பேசி தேடுதல் செய்யும் வேட்டை முறை காணப்பட்டது. இவர்கள் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து சேமித்து வைக்கவில்லை. கலைஞர் என்பவர் இரந்து வாழும் நிலையினராய் இல்லை. இனக்குழுச் சமுதாயத்தில் தலைவன் கலைஞர்களுடைய ஆட்டங்களில் தானும் கலந்து கொண்டான்.

அரசு என்னும் நிறுவனம் தோன்றிய போது, தலைவன் என்பதற்கான அடையாளங்களாக முடி, முரசு, கொடி, குடை போன்ற சின்னங்கள் ஏற்ப்பட்டன. வேந்தன் இனக்குழுத் தலைவரைப் போலப் பகுத்துண்ணும் முறையினைப் பேணவில்லை. கலைஞர்களை தனது புகழினைப் பாடிப் பரிசில் பெறும் இரவலர்களாகக் கருதினான். இதனை,

**பாடுநர்க்கு அடைத்த கதவின், ஆடு மழை**
**அணங்குசால் அடுக்கம் பொழியும் நும்**
**மணங்கமழ் மாலவரை வரைந்தனர், எமரே**
**(புறம்.151:10 - 12)**


ISBN Number: 978-81-986812-3-2

என்ற புறநானூற்றுப்பாடல் பாடும் கலைஞர்களுக்கு அரசன் கதவினை அடைத்த நிலையினைப் பதிவு செய்கிறது. அரசன் என்பவன் புலவர்களுக்கு பரிசில் கொடுக்கும் நிலையில் உள்ளவன். கலைஞன் என்பவன் அதனைப் பெற்று வாழக் கூடிய நிலையில் உள்ளவன் என்ற ஏற்றத் தாழ்வுகள் துவங்கிய காலாமாக சங்க இலக்கிய வேந்தர் மரபின் தோற்ற காலம் அமைகிறது.

இனக்குழுச் சமூக அமைப்பானது சங்ககாலத்திற்கு முந்தைய நிலையாகும். இது உருவாக்கிய பாதீடு, பகிர்ந்துண்ணல் போன்ற பண்புகள் சில மாற்றங்களுடன் சங்க காலத்தை எட்டியது. வேந்தன் என்பான் தன்னை நாடிவரும் இரவலருக்கு வேண்டிய அளிக்கும் புரவலன் எனும் நிலையினை அடைகின்றான். தான் செய்வது அறம் என்ற எண்ணம் கொள்கின்றான். தான் கொடுக்கும் பொருளுக்காக பாடுபவர்கள் இரவலர்கள் என்ற நிலை ஏற்படுகிறது. இதன் அடிநிலையில் விருந்தோம்பல் தோற்றம் பெறுகிறது.

**விருந்தோம்பலில் திணைக் குடியினர்**

விருந்தோம்பல் என்பது சங்கத் தமிழர்களின் தலையாக பண்பாகக் காணப்பட்டது. விருந்தோம்பலில் பல்வேறு உணவு முறைகளைத் தமிழர்கள் கொண்டிருந்தனர். தமிழ் இலக்கியங்கள் உணவின்

 **ISBN Number: 978-81-986812-3-2**

தேவையை எடுத்து விளக்குகின்றன. கூத்தர், பாணர், பொருநர் போன்ற கலைஞர்கள் பேரரசர்களையும், சிற்றரசர்களையும், செல்வந்தர்களையும் காணச் செல்கின்றனர். அவர்களின் பயண வேளையில் காணும் இடங்களில் மக்கள் அவர்களை வரவேற்று விருந்தோம்பல் செய்கின்றனர். மற்றவர்களுக்குக் கொடுத்து வாழ்வது இன்றியமையாத செயல் என்று பாடல்கள் கூறுகின்றன. நாகரிகம் மற்றும் பண்பாட்டில் உலகிற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது தமிழினமாகும். இதனில் விருந்தோம்பல் என்னும் முறைமை தலைசிறந்தது ஆகும். உணவு மற்றும் உணவுப் பொருட்களை மறைத்து வைப்பது வஞ்சகச் செயல் என்பதனை,

**இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமியர் உணவு (குறள், 229)**

என்ற குறள் எடுத்துரைக்கிறது.

**பாண்கடன் முறை**

குடிமுறை பகுத்தல் என்னும் உணர்வானது "கடன்" என்னும் கடமையாக மாறியது. குறிஞ்சியில் செயல்பட்ட இந்தக் கடன் என்னும் கடமையானது பாணர் வாழ்வு முறையில் பரிசில் கொடுத்தல் என்னும் நிலையினை எட்டியது.

 ISBN Number: 978-81-986812-3-2

மருதத்திணையில் சங்கச் சமூகம் என்பது உடைமை சமூகம் என்ற நிலைமைக்கு மாறியது. வேந்தர் தோற்றக்காலத்தில் வரிசை அறியாமல் பரிசளித்தல் என்று அது மாற்றத்திற்கு உள்ளானது. இது மற்ற திணைகளில் விருந்துண்ணல், வரிசையறிந்து பரிசளித்தல் என்றும் கூறப்பட்டது. கிடைத்த உணவுப் பொருட்களைத் தம்மை நாடி வந்தவர்களுக்குக் கொடுத்து உண்டார்கள். பகிர்ந்துண்ணும் இந்த இனக்குழுப் பண்பு விருந்து பேணும் வகையில் வெளிப்பட்டுள்ளது.

விருந்து என்பது அடிப்படையில் பகிர்ந்துண்ணுதலின் வெளிப்பாடு ஆகும். சங்க காலத்தில் விருந்து உபசரித்தல் மிகச் சிறப்பாக இருந்ததைச் சங்க இலக்கியங்கள் உயர்வாகப் பதிவு செய்துள்ளன. இனக்குழுச் சமூக அமைப்பு என்பது சங்க காலத்திற்கும் முந்தையது. இனக்குழுச் சமூகம் உருவாக்கிய பாதீடு, பகிர்ந்துண்ணுதல் முதலானப் பண்புகள் இனக்குழு காலத்திலிருந்து சங்க காலத்திற்கு வந்தது. கலைஞர்களின் பயணங்களின் போது இடையே வாழும் குடிமக்கள் வழிநடையால் வருந்தும் பாண் சமூகத்திற்கு உணவு வழங்கினர். இது அறம் என்ற கட்டமைப்பு ஏற்பட்ட காலமாகக் கருதப்படுகிறது. சங்க இலக்கியப் பாடல்கள் பாணர்களின் வறுமையைப் பலவாறு படம்பிடித்துக் காட்டுகின்றன. பாண் சமூகம் பசியின் காரணமாகப்


**ISBN Number: 978-81-986812-3-2**

உடல் மெலிந்து, எலும்பும் தோலுமாய்ச் சுற்றத்தாருடன் கடும்பசியில் உழன்றதைக் காண முடிகிறது. பாணர்கள் இயல், இசை, நாடகமெனப் பலதுறை வல்லுநர்களாக இருந்தனர். எனினும் திறமைக்கேற்ற பொருள் வளமில்லாமல் இருந்தார்கள். வறுமையில் வாடினார்கள். அவர்கள் உணவு, உறையுள் இன்றி, உடுத்த நல்லாடைகள் இன்றிச் சுற்றத்தாரோடு நாடோடிகளாய்த் திரிந்தனர். பெரும்பாலான பாணர்கள் வறுமை நீங்காதச் சூழலிலேயே வாழ்ந்து வந்தனர் என்பதை ஆற்றுப்படைப் பாடல்கள் பதிவு செய்கின்றன. மருதத் திணையில் சங்கச் சமூகம் ஓர் உடைமைச் சமூகமாகவும், உறவுமுறை உழைப்பிலிருந்து குடி ஊழிய முறைக்கு மாறிய சமூகமாகவும் மாறியது. இத்தகைய மாற்றங்கள் உணவு முறையிலும் பிரதிபலித்தன.

**உணவியல் முறைமைகள்**

சங்கத் தமிழர்கள் மரக்கறி உணவு, இறைச்சி போன்ற இருவகையான உணவு முறையினைக் கொண்டவர்கள் ஆவர். உணவினைத் தமிழர்கள் பல பெயர்களில் அழைத்து வந்துள்ளனர்.

**உணாவே வல்சி உண்டி ஓதன**
**மசனம் பதமே இரையா கார**
**முறையே யூட்ட உணவெனலாகும் (பிங்கல நிகண்டு, 1153)**

 **ISBN Number: 978-81-986812-3-2**

என்று உணவின் பெயர்களை பிங்கல நிகண்டு உணா, வல்சி, உண்டி, ஓதனம், அசனம், பதம், இரை, ஆகாரம், உறை, ஊட்டம் என்று வகைபடுத்திக் கூறுகின்றது. சங்ககால உணவு முறையிலும், அதன் அடிசில் கலையிலும் தொடர்ச்சியான பண்பாட்டு மாற்றங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பரிணமித்தது. மருதத்திணையில் அறுசுவை உணவு என்ற நிலையினை அடைந்தது.

> **ஐவகை உணவு முறையை நடைமுறையில் உண்பன, தின்பன, கொறிப்பன, நக்குவன, பருகுவன என்பார்கள். இந்தப் பாகுபாடு உணவின் தன்மை, உண்ணும் முறை, சுவை முதலானவற்றின் அடிப்படையில் உருவானது (*உணவுப் பண்பாடு*, ப. 4)**

என்கிறார் அ. கா. பெருமாள். தொடக்கத்தில் சமைக்காத பச்சை இறைச்சியைத் தின்றனர். இதனை 'பச்சூன்' என்று அழைத்துள்ளனர்.

> **பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோல்**
> **கோள்வல்,பாண்மகன் தலைவலித்து யாத்த**
> **(பெரும்பாண். 283)**

கடற்கரையை அடுத்த பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் பாணர்கள் பச்சை இறைச்சியைத் தோல் பையில் போட்டு வைத்திருப்பர். பின்னர், காட்டில் இயற்கையாக எழுந்த

 **ISBN Number: 978-81-986812-3-2**

தீயில் இறைச்சியை வதக்கி உண்ணத் தொடங்கினர். இதனை,

**இருள்துணிந் தன்ன ஏனம் காணின்**
**முளிகழை இழைந்த காடுபடு தீயின்**
**நளிபுகை கமழாது இறாயினர் மிசைந்து**
**(மலைபடு. 247-250)**

என்ற *மலைபடுகடாம்* பாடல் வரிகள் காட்டுகிறது.

நெருப்பைக் கண்டுபிடித்து பின்னர் அதில் சுட்டுத் தின்னும் முறையை உருவாக்கினார்கள். இதனை,

**முயல் சுட்ட ஆயினும் தருகுவேம் புகுதந்து**
**ஈங்கு இருந்தீமோ முதுவாய்ப் பாண (புறம். 319: 8).**

என்ற புறநானூற்றுப்பாடல் காட்டுகிறது.

**சங்க காலத்தில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட வகைகளில் உணவை உட்கொண்டுள்ளனர். இது மிகவும் கருத்தூன்றி அறியவேண்டிய ஒன்றாகும். (*தமிழர் உணவுகள்*, ப.24 )**

என்று மணி கூறுகிறார். சங்ககாலத் தமிழர்கள் உணவுப் பண்பாட்டை உணர்வும் அர்த்தமும் கொண்டதாகக் கருதினார். உணவை உடலோடும் சமூகத்தோடும் சேர்த்து பார்த்திருக்கின்றனர்.

**1. அருந்துதல் - மிகக் குறைவாக உட்கொள்ளுதல்**


**ISBN Number: 978-81-986812-3-2**

| | | |
|---|---|---|
| **2. உண்ணல்** | **-** | **பசிதீர உட்கொள்ளுதல்** |
| **3. உறிஞ்சல்** | **-** | **வாயைக் குவித்துக் கொண்டு நீரியல் பண்டத்தை ஈர்த்து உட்கொள்ளுதல்** |
| **4. குடித்தல்** | **-** | **திரவ உணவைச் சிறிது சிறிதாகப் பசிநீங்க உட்கொள்ளுதல்(கஞ்சி போன்றவை)** |
| **5. தின்னுதல்** | **-** | **தின்பண்டங்களை உட்கொள்ளுதல்** |
| **6. துய்த்தல்** | **-** | **சுவைத்து மகிழ்ந்து உட்கொள்ளுதல்** |
| **7. நக்கல்** | **-** | **நாக்கினால் துழாவி உட்கொள்ளுதல்** |
| **8. நுங்கல்** | **-** | **முழுவதையும் ஒரே வாயில் ஈர்த்துறிஞ்சி உட்கொள்ளுதல்** |
| **9. பருகல்** | **-** | **திரவப் பண்டத்தைச் சிறுகக் குடிப்பது** |
| **10. மாந்தல்** | **-** | **பெரு வேட்கையுடன் மடமடவென்று உட்கொள்ளுதல்** |


**ISBN Number: 978-81-986812-3-2**

**(கள் மாந்துதல்)**

**11. மெல்லல் - கடிய பண்டத்தைப் பல்லால் கடித்துத் துகைத்து உட்கொள்ளுதல்**

**12. விழுங்கல் - பல்லுக்கும் நாக்கும் இடையே தொண்டை வழி உட்கொள்ளுதல்.**

**(*சங்க காலத் தமிழர் உணவு*, ப. 32)**

என பக்தவத்சலபாரதி பதிவு செய்கிறார்.

நெய், பால், தயிர் மாங்காய், கொம்மட்டி மாதுளை, கீரை மற்றும் காய்கறி வகைகளையும் உண்டனர். உணவு வாழை இலைகளில் பரிமாறப்பட்டது. கைம் பெண்களுக்குப் பழைய சோறும் வேளைக் கீரையும் உணவாகத் தரப்பட்டது. துறவியர் பழைய சோறும் வெந்நீரும் உண்டனர். உலர்ந்த வற்றல்களை சூடான நெய்யில் பொரித்து உண்டனர்.

**நெய் துள்ளிய வறை முகக்கவும்**
**சூடு கிழித்து வாடுஊன் மிசையவும் (புறம். 326: 4-5)**

அரிசிச் சோறு முதன்மை உணவாக இருந்தது. முக்கியப் பண்டிகை நாட்களில் ராஜான்னம் எனும் சிறப்பு வகை அரிசியைச் சமைத்து உண்டனர்.என்பதை, **“சுடர்க்கடைப்**

 ISBN Number: 978-81-986812-3-2

**பறவைப் பெயர்ப்படு வத்தம்" (பெரும். 305)** பெரும்பாணாற்றுப்பாடல் வழி அறிய முடிகிறது.

சமுதாயத்தில் அந்தணர் தவிர்த்த பிற திணைக் குடியினர் இறைச்சியைத் தடையின்றி உண்டனர். மன்னர்களிடம் ஆடிப்பாடிச் சென்று பரிசில் வேண்டிய பாணரும், விறலியரும் விருந்து நிகழ்வுகளில் கலந்து கொண்டு புலால் உணவை உண்டு களித்தனர்

**பொங்கு பிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி**
**வரும் கடல் ஊதையின் பனிக்கும்**
**துவ்வா நறவின் சாய் இனத்தானே (பதிற்.60: 10 – 12)**

ஆமை, மீன், மான், முயல் போன்றவை விருப்பமான புலால் உணவுகளாக இருந்தன.சங்ககால மக்கள் திணை சார்ந்து கிடைத்த உணவுகளை தங்களது சுவைக்கு ஏற்றவாறு சமைத்து உண்டனர் என்பதை பாடல்கள் பதிவு செய்கின்றன.

**உணவில் நெருப்பின் பயன்பாடு**

காடுகளில் இயற்கையாக உருவாகும் நெருப்பு உணவினை சமைத்து உண்ணுதல் என்னும் முறைக்கு வித்திட்டது. காடுகளில் இயற்கையாக எழுகின்ற காட்டுத்தீயில் வேட்டையாடிய விலங்குகளை இடுவர். அதன் உடலில் முடிகளை சீவிவிட்டு இறைச்சியை வேகவைத்து உண்டனர். இயற்கையாக காட்டுத்தீ


**ISBN Number: 978-81-986812-3-2**

ஏற்படுகிறது. இது ஆதிமனிதன் நெருப்பினைக் கண்டுபிடிக்க காரணமாய் அமைகிறது. நெருப்பினை சமைத்தலுக்கு பயன்படுத்துவது இதனால் அறியப்பட்டுள்ளது. இதற்கு நெருப்பு பயன்பட்டதை,

**முளிகழை இழந்த காடுபடு தீயின்**
**நளிபுகை கமழாது இறாயினர் மிசைந்து**
**(மலை. 248 - 249)**

*மலைபடுகடாம்* நெருப்பினைக் குறித்து கூறுகிறது. இதனை, சங்க இலக்கியப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. நெருப்பின் பயன்பாட்டிற்கு பிந்தைய நிலைகளில் பொறித்த உணவுகள் விரும்பி சமைக்கப்பட்டுள்ளன. நெய்யில் இட்டுப் பொறித்த இறைச்சியினை,

**பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண்**
**வேவையொடு (மலை. 168)**
**ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்**
**வறைகால் யாத்தது வயின்தொறும் பெறுகுவிர்**
**(மலை.132-133)**
**வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி**
**மனைவாழ் அளகின் வாட்பொரும் பெறுகுவிர்**
**(மலை.255-256)**

போன்ற வரிகளும், இறைச்சியினை வேகவைத்து சமைத்த முறையை, "**தண்மீன் சூட்டொடு தளர்ததலும் பெறுகுவிர்" (பெரும். 282)** *பெரும்பாணாற்றுப்படை*


**ISBN Number: 978-81-986812-3-2**

வரிகளும் எடுத்துக் கூறுகிறது.வேகவைத்தல், பொரித்து உண்ணுதல், சுட்டு உண்ணுதல் போன்ற முறைமைகளை சமைத்தலில் பயன்படுத்தி விருந்தோம்புதலைச் செய்துள்ளனர்.

**திணைசார் உணவுப் பண்பாடு**

குறிஞ்சித் திணையில் இயற்கையாகப் பாறையில் வாட்டுவதும், தீயிட்டுச் சுடுவதும் முதன்மையானதாகக் காணப்பட்டது. இதன் தொடர்ச்சியாக வேக வைப்பது, சமைப்பது போன்ற முறைகள் தோன்றின. புளியைக் கலந்து சமைத்த வெஞ்சோற்றினை உண்டனர்.

**எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை ஆயமொடு**
**ஆமான் சுட்டின் அமைவரப் பெறுகுவிர்**
**(சி.பா.175-177)**

என்று சிறுபாணாற்றுப்படை பதிவு செய்கிறது. முள்ளம் பன்றிக் குழம்பு மற்றும் உடும்புக்கறி வறுவலும் செய்து உண்டனர்.

**அவரை வான் புழுக்கட்டிப் பயில்வுற்று**
**இன்சுவை மூரல் பெறுகுவிர் (பெ. 195-196)**

மேலும், **"அவரை வான் புழுக்கு என்பதை வெஜிடபிள்பிரியாணி"** (*சங்க காலத் தமிழர் உணவு*, ப. 49) என்று பகக்தவச்சலபாரதி கூறுகிறார். இன்று வரையில் நாம் வாழும் நிலவியலுக்கு ஏற்ப உற்பத்தி

 **ISBN Number: 978-81-986812-3-2**

முறைகளுக்கு ஏற்ப நமது உணவுப் பண்பாடு அமைந்துள்ளது. இது சங்ககால மக்களின் திணைப் பண்பாட்டின் தொடர்ச்சி எனலாம்.

**குறிஞ்சியின் நிலவியல்**

மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி எனப்படுகின்றது. சங்க காலத்தில் மலைகளிலும் மலை சார்ந்த இடங்களிலும் வாழ்ந்தவர்கள். வேட்டுவர், கானவர், குறவர் ஆவர்.இதனை, **“சேயோன் மேய மைவரை உலகமும்” (தொல். அகத்திணை. 5: 2)** என தொல்காப்பியர் வரையறை கூறுகிறார். குறிஞ்சித் திணை மக்கள் தினை, வரகு, புல்லரிசி, மூங்கிலரிசி, ஐவன நெல், அவரை, கிழங்கு தேன், வேட்டைப் பொருட்கள், பிற காடுபடு பொருட்கள் முதலானவற்றை உணவுக்கான அடிப்படைகளாகப் பயன்படுத்தினர். சங்க காலத்தில் குறிஞ்சியின் வாழ்வாதாரம் வேட்டையாடி உணவு சேகரித்தலாகும். குறிஞ்சியில் கானக் குறவர்கள் மற்றும் குன்றக் குறவர்கள் வன்புல விவசாயம் செய்தனர். ஆண்கள் குழுவாக மேற்கொண்ட வேட்டையின் மூலம் விலங்கின் உணவு கிடைத்தது. பெண்கள் சேகரித்த வனப்பொருள்கள் மூலம் தாவர உணவு கிடைத்தது. தினை, வரகு, தினை, நெல், அவரை, எள், வெண் சிறுகடுகு, இஞ்சி, வாழை முதலான பயிர்களும் உணவாதாரமாக விளங்கின.


**ISBN Number: 978-81-986812-3-2**

**குறிஞ்சி உணவுப்பண்பாடு**

குறிஞ்சித் திணை வாழ்வில் பன்றி வேட்டை முக்கியமானது. பன்றிகள் தாக்கக்கூடும் என்பதால், அவை நீர் பருகச் செல்லும் வழித் தடங்களில் பதுங்குக் குழிகளை அமைத்து அவற்றை வேட்டையாடினர். இதனை,

**விளைபுனம் நிழத்தலின் கேழல் அஞ்சிப்**
**புழைதொறும் மாட்டிய இருங்கல் அரும்பொறி**
**(மலை. 193-194)**

என்று கூறப்படுகிறது. கள்ளும் உணவாகக் கருதப்பட்டது. கடைத் தெருக்களில் கள் விற்பதற்குத் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவற்றின் இருப்பிடத்தை அறிய கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தன.

**கேளா மன்னர் கடிபுலம் புக்கு,**
**நாள்ஆ தந்து, நறவுநொடை தொலைச்சி**
**இல்அடு கள்இன் தோப்பி பருகி**
**மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி (பெரும்.140 – 143 )**

என்பதை பெரும்பாணாற்றுப்படை பாடல் கூறுகிறது.

*மலைபடுகடாம்* முள்ளம்பன்றி வேட்டையினைப் பதிவு செய்துள்ளது. இவ்வேட்டை ஆபத்தானதாகும். சில சமயங்களில் முள்ளம்பன்றி தனக்கு ஆபத்து ஏற்படும்

 **ISBN Number: 978-81-986812-3-2**

காலங்களில் உடலினைச் சிலிர்த்துத் தன் முட்களால் வேட்டைக்காரனைத் தாக்கிவிடும். இவ்வாறு புண்பட்ட வேட்டுவன் ஒருவன் வலிதாங்காது கூச்சலிட்ட செய்தியினை மலைபடுகடாம் பதிவு செய்கிறது.

**சேய் அளைப்பள்ளி எஃகுறு முள்ளின்**
**எய்தெற இழுக்கிய கானவர் அழுகை**
**(மலை. 300-301)**

எனும் பாடலடிகள் விளக்குகிறது. உடலைச் சிலிர்த்து எதிரிகளின் மேல் முள்ளை எய்வதால் முள்ளம்பன்றி **'எய்பன்றி'** என்றும் அழைக்கப்பட்டது.

சங்ககால வேட்டுவர்கள் புலிகளையும் வேட்டையாடியுள்ளனர். அவை வரும் தடத்தினைக் கண்டு வலைகளை விரித்துப் பிடித்தனர். வலையில் சிக்கிய புலியினைத் தாக்கிக் கொன்றனர். புலி பாய்ந்து மார்பைக் கிழித்துப் புண்ணாக்கியதும் உண்டு.இதனை,

**கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பில்**
**நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென**
**அறல்வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல் (மலை. 302-304)**

*மலைபடுகடாம்* பாடல் வரிகள் பதிவு செய்கின்றன.

சங்ககால மக்கள் யானை வேட்டையிலும் ஈடுபட்டனர். யானை வந்தபோது கானவர் அனைவரும் ஒன்று திரண்டு போட்ட ஆரவாரம், கானமெங்கும்


**ISBN Number: 978-81-986812-3-2**

எதிரொலித்தது. சங்ககால வேட்டுவர்கள் கூட்டு வேட்டையில் ஈடுபட்டனர். வில், அம்பு, கவண், வேல், கல் அடார், வலை, கண்ணி, சுருக்க வார் பொறி முதலான கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,
**“தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி” பெரும். 113)**
என்ற *பெரும்பாணாற்றுப்படை* பாடல் கூறுகிறது.

சங்க காலத்தில் குறிஞ்சி நில மக்கள் தேன், கிழங்கு, மான் இறைச்சி, மது போன்றவற்றைப் பிற திணை மக்களுக்குக் கொடுத்துத் தங்களுக்குத் தேவையானப் பொருட்களைகப் பெற்றுக் கொண்டனர். இதற்கு ‘பண்டமாற்றம்’ என்று பெயர்.

**தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்**
**மீன் நெய்யொடு நறவு மறுகவும்**
**தீங் கரும்போடு அவல் வகுத்தோர்மான்**
**குறையொடு மது மறுகவும் (பொரு.214-217)**

தினைப்புனத்தில் தினையோடு கலந்து பருத்தியையும் விளைவித்தனர். இது கலப்புப்பயிர் முறையாக உருவானது.

**தொய்யாது வித்திய துளர்படு துடவை**
**ஐயவி அமன்ற வெண்கால் செறுவின்**
**மையென விரிந்தன நீள்நறு நெய்தல்**
**(மலை. 122–124)**
**கௌவை போகிய கருங்காய் பிடிஏழ் (மலை.105)**


**ISBN Number: 978-81-986812-3-2**

உயவைக் கொடியின் வேரினை வாயிலிட்டு மென்றால் நீர் ஊறும் நீர் வேட்கை தணியும் என்பது அக்கால மக்களின் நிலவியல் சார்ந்த தாவர அறிவினை பாடல் வழி வெளிப்படுத்துகிறது. **“மாறுகொள ஒழுகின ஊறுநீர் உயவை” (மலை. 136)** இதனை மலைபடுகடாம் பாடல் வரிகள் கூறுகிறது. குறிஞ்சி என்பதன் மலை சார்ந்த நிலவியல் தன்மைக்கு ஏற்ற உணவுகளை அம்மக்கள் தகவமைத்து உண்டனர்.

**மருதத்தின் நிலவியல்**

வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருதம் என்றழைக்கப்படுகிறது. மலை மற்றும் கடல் இரண்டுக்கும் இடையேயான சமவெளி மருத நிலமாகும். இதனி, **“வேந்தன் மேய தீம்புனல் உலகமும்” (தொல். அகத்திணை. 5: 3)** என்ற தொல்காப்பிய வரிகள் காட்டுகின்றன.

மலைகளின் பெய்யும் மழை ஆறாக மாறுகிறது. ஆறுகள் சமவெளிகளின் ஊடாக ஓடிக் கடலில் கலக்கின்றது. இதன் காரணமாக, மருத நிலத்தில் நீர்வளம் மிகுந்து பயிர்கள் செழித்து வளர்கின்றன. மருத நிலம் நாடு என்று அழைக்கப்படுகிறது.

மருதத் திணையின் வாழ்வாதாரம் என்பது நீர்ப்பாசன வேளாண்மை சார்ந்ததாக அமைகிறது. இங்கு மென்புலம் என்கிற நன்செய் வேளாண்மை


**ISBN Number: 978-81-986812-3-2**

செய்யப்பட்டது. இது உபரி சார்ந்தும் விற்பனைக்கு உரியதாகவும் காணப்பட்டது.

**சாலி நெல்லின் சிறைகொள் வேலி**
**ஆயிரம் விளையுட் டாகக்**
**காவிரி புரக்கும் நாடுகிழ வோனே (பொரு.246-248)**

எனும் *பொருநராற்றுப்படை* வரிகள் நன்செய் வேளாண்மையின் சிறப்பினைப் பேசுகின்றன. காவிரிப்படுகையில் ஒரு வேலி நிலத்தில் ஓராயிரம் கலம் நெல் விளைந்த செய்தியினை இப்பாடல் வரிகள் காட்டுகின்றன.

**மருதம் உணவுப்பண்பாடு**

மருத நிலத்தின் முக்கிய விளைபொருட்களாக, நெல்லும், கரும்பும் இருந்தன. இவை பணப்பயிர்கள் ஆகும். நெல் எனும் சொல் பெரும்பாலான இடங்களில் கூறப்பட்டுள்ளது. மருதத் திணையில் கரும்புத் தோட்டங்கள் உள்ளன. அதனை அரைத்துச் சாறெடுக்க கரும்பு ஆலைகள் செயல்பட்டன என்பதை,

**எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை**
**விசயம் அடூஉம் புகைசூழ் ஆலைதொறும்**
**கரும்பின் தீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்**
**(பெரும்.260 - 262)**

 **ISBN Number: 978-81-986812-3-2**

தானியங்களைச் சேமித்து வைப்பதற்கான நெற்குதிர்கள் உழவர் வீடுகளில் இருந்தன. இதனை, **"குமரி மூத்த கூடு ஓங்கு நல்இல்" (பெரும். 247)** *பெரும்பாணாற்றுப்படை* கூறுகிறது. சோறு என்பதற்கு 'அடிசில்,' 'துழவை' என்ற பெயர்கள் கூறப்பட்டதை,

**சுவல்விளை நெல்லின் செவ் வவிழ்ச் சொன்றி**
**(பெரும். 131)**
**பனிவரை மார்பன் பயந்த நுண்பொருள்**
**பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்n (சிறு. 240 - 241)**
**அவையா அரிசி அம்களித் துழவை (பெரும். 275)**
**ஒன்று அமர் உடுக்கை கூழ்ஆர் இடையன்**
**(பெரும். 175)**

ஒவ்வொன்றும் வெவ்வேறான சமையல் முறையைக் குறிக்கிறது. கொழியலரிசியைக் களியாகத் துழாவிச் செய்த கூழையும் உண்டனர். மருதம் என்பது நெல்லினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி சார்ந்த உணவியலைக் கொண்டதாகும்.

**முல்லைத் திணையின் நிலவியல்**

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்பட்டது. காட்டை ஒட்டியப் பகுதிகளில் வாழ்பவர்கள் காடுறை இடையன் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் வாழ்ந்த பகுதி முல்லை,

 **ISBN Number: 978-81-986812-3-2**

புறவு, வன்புலம், என்றெல்லாம் அழைக்கப்பட்டது. **“மாயோன் மேய காடுறை உலகமும்” (தொல். அகத்திணை. 5: 1)** முல்லை நிலம் மேய்ச்சல் நிலம் விடுநிலம் எனப்பட்டது. முல்லைத் திணையின் நிலப்பாகுபாடும் மங்கள் வேறுபாடும் வாழ்வாதார விரிவாக்க நிலை ஆகும். இவர்கள் கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் ஆவர்.

**முல்லைத் திணையின் உணவு முறை**

முல்லைத்திணையின் வன்புல விவசாய முறைகளைப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. ஆயமகள் நெய் விலைக்குப் பண்டமாற்றாகப் பசும்பொன் வாங்காமல் எருமை, பசு முதலானவற்றை வாங்கினாள்.

> **குறுநெறிக் கொண்ட கூந்தல், ஆயமகள்**
> **அளைவிலை உணவின் கிளைஉடன் அருத்தி**
> **நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்**
> **(பெரும்.162 - 164)**

பகைவர் நாட்டிலிருந்து கவர்ந்து வரப்பட்ட பால் தரும் பசுவைக் கள்ளிற்கு விலையாகக் கொடுத்ததைப் *பெரும்பாணாற்றுப்படை,*

> **கேளா மன்னர் கடிபுலம் புக்கு**
> **நாளா தந்து நறவுநொடை தொலைச்சி**
> **இல்லகு கள்ளின் தோப்பி பருகி (பெரும்.140 - 142)**


**ISBN Number: 978-81-986812-3-2**

எடுத்துக் காட்டுகிறது. விருந்தினர்கள் நீண்ட தூரம் நடந்து வந்த களைப்பு நீங்க, அவரை விதை, மூங்கிலரிசி, நெல்லரிசி ஆகியவற்றினைப் புளி கரைத்த உலையில் இட்டுக் குழைத்து விருந்தளிக்கின்றனர்.

**வேய்கொள் அரிசி மிதவை சொரிந்த**
**சுவல்விளை நெல்லின் அவரையம் புளிங்கூழ்**
**அற்கு இடை உழந்ததும் வருத்தம் வீட**
**அகலுள் ஆங்கண் கழிமிடைந்து இயற்றிய**
**புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்**
**(மலை. 435 - 440)**

முல்லைநில மக்களின் விருப்ப உணவாக வெள்ளாட்டு இறைச்சி இருக்கிறது. இதனை, **"ஊன்துவை அடிசில்"** எனக் கூறுகின்றனர்.

**வல்லோன அட்ட பல்ஊன் கொழுங்குறை**
**அரிசெத்து உணங்கிய பெருஞ்செந் நெல்லின்**
**தெரிகொள் அரிசித் திரள்நெடும் புழுக்கல் (பெரும். 472 - 474)**

'அமலை' எனும் பொங்கல் சோறு உண்டனர். இதனை,

**பொன் அறைந் தன்ன நுண்நேர் அரிசி**
**வெண் எறிந்து இயற்றிய மாக்கண் அமலை**
**(மலை. 440 - 441)**

என்ற *மலைபடுகடாம்* பாடல் கூறுகிறது. முல்லைத் திணை ஆயர்கள் எருமை, பசு, ஆடு, காளை ஆகியவற்றை


**ISBN Number: 978-81-986812-3-2**

வளர்த்துள்ளனர். முல்லை நிலங்களில் ஆயர் பெண்கள் பூக்கள், பால், மோர், தயிர், வெண்ணெய், நெய் போன்ற பால் பொருட்களை உணவுக்காகப் பயன்படுத்தினர். முல்லை நிலம் பண்டமாற்றத்தை அடிப்படையாக் கொண்டுள்ளது.

**நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்**
**எருமை நல்ஆன் கருநாகு பெறூஉம்**
**மடிவாய்க் கோவலர் குடிவயின் சேப்பின்**
**(பெரும். 164 -166)**

எனும் பெரும்பாணாற்றுப்படைப் பாடலடிகள் முல்லை நில மக்களின் பண்டமாற்றத்தினைக் காட்டுகின்றன. இதனை,

**பாலொடு வந்து கூழொடு பெயரும்**
**ஆடுடை இடைமகன் (குறு.291:3-4)**

என்ற *குறுந்தொகை* பாடலடிகள் கூறுகின்றன. முல்லை நிலம் என்பது கால்நடை வளர்ப்பு என்ற உற்பத்தி நிலையின் அடுத்த பரிணாமம் எனலாம்.

**நெய்தல் திணையின் நிலவியல்**

நெய்தல் திணை கடலை ஆதாரமாக் கொண்டது ஆகும். இதனை,**"வருணன் மேய பெருமணல் உலகமும்" (தொல். அகத்திணை. 5: 4)** என்று தொல்காப்பியர் கூறுகிறார்.


**ISBN Number: 978-81-986812-3-2**

நெய்தலில் சேகரித்தல், பண்டமாற்றம், உற்பத்தி, வணிகம் ஆகிய நான்கு முக்கியக் கூறுகள் காணப்படுகின்றன. மீன் பிடித்தல் என்பது சேகரித்தலாக உள்ளது. உப்பு விளைவித்தல். சங்கு, பவளம், முத்துக் குளித்தல் போன்றவை உற்பத்தி சார்ந்தவையாகக் காணப்படுகின்றன. நெய்தலில் சேகரித்தல், பண்டமாற்றம் அகிய இரண்டும் தொடர்ந்தாலும் சங்கு, பவளம், முத்து ஆகிய விலை உயர்ந்த பொருட்களின் உற்பத்தி மற்றும் கடல் வாணிகம் போன்றவை புதிய வாழ்வாதாரங்களாக உருவாயின. சங்க இலக்கியம் கடலையும் கானலையும் நெய்தல் என்று கூறுகிறது.

**நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்**
**கடலும் கானலும் தோன்றும் (குறு. 81: 5 - 6)**

கடற்கரையினை ஒட்டிய பெருமணல் பகுதியில் நெய்தல் நில மக்களின் வாழிடங்கள் இருந்தன. இவ்வூர்கள் "பாக்கம்" என்று அழைக்கப்பட்டன.நெய்தல் திணைக்குரிய பூர்வக் குடியினர் பரதவர், பரதர், கடலர், திமிலர், நுளையர், உமணர், வலைஞர், வளையோர், அளவர் என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.

**நெய்தல் உணவியல்**

மீன் பிடித்தல் நெய்தல் நில முக்கிய வாழ்வாதாரம் ஆகும். சங்க காலத்தில் பரதவர் தூண்டில்களில் சிறிய

 **ISBN Number: 978-81-986812-3-2**

மீன்களை இரையாகக் குத்தினர். கடலிலும், கழியிலும் எறிந்து மீன் பிடித்தனர்.

**நெடுங்கழைத் தூண்டில் நடுங்க நாண் கொளீஇ**
**கொடுவாய் இரும்பின் மடிதலை புலம்ப,**
**பொதி இரை கதுவிய போழ்வாய் வாளை**
**(சிறு. 285 - 287)**

இதனை சிறுபாணாற்றுப்படை பாடல் வரிகளின் வழி அறியலாம். மேலும், காய வைக்கப்பட்ட குழல் மீனின் சுட்ட கருவாடு தொடுகறியாய் இருந்தது.

**அறல்குழல் பாணி தூங்கி அவரொடு**
**வரல் குழல் கூட்டின் வயின்வயின் பெறுகுவிர்**
**(சிறு. 162 - 163)**

மீனவரின் பொருளியல் வாழ்வு கலப்புப் பொருளாதாரம் சார்ந்தது. நெய்தலில் உணவு வகைகள் பெரிதும் மீன் பண்டங்களைச் சார்ந்ததாகும். கடலிலும் கழிகளிலும் மீன் வேட்டம் செய்த மக்கள் பல வகையான மீன்களை உண்டனர். இதனை, **“பல்மீன் உணங்கல் படுபுள் ஓப்புதும்" (அகம்.80).** மிகுதியான மீன்களை அரிந்து உப்பிட்டுக் காயவைத்துக் கருவாடு போட்டனர். நெய்தல் திணை மக்கள் மருதத்துடன் நோக்கும்போது படிநிலையில் கீழ் உள்ளவர்களாகக் கருதப்பட்டனர். உணவு சார்ந்த அடையாளப்படுத்தல்களின் தோற்ற காலமாக இதனைக் கூறலாம்.

 **ISBN Number: 978-81-986812-3-2**

**பாலைத் திணையின் நிலவியல் :**

குறிஞ்சியும் முல்லையும் கோடையில் திரிவதால் பாலை தோன்றுகிறது. பாலைத் திணையின் வாழ்வாதாரம் மற்ற திணைகளிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகிறது.குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து உருவாகும் வறண்ட பாலை நிலத்தின் தன்மையானது வளமானதாகக் காணப்படவில்லை.

> **கோடையின் வறட்சியிலும் இந்நிலத்தில் பாலை மரம் வாடாமல் கண்ணுக்குப் புலப்படுவதால் பாலை என்ற பெயர் இத்திணைக்கு வந்தது என்ற கருத்தும் உண்டு (*சங்க காலத் தமிழர் உணவு*, ப. 29)**

என்று பக்தவச்சலபாரதி கூறுகிறார். வேட்டை, சேகரித்தல், ஆநிரை கவர்தல், நிரை மீட்டல், வழிப்பறி, கொள்ளையடித்தல், இத்திணையின் முக்கியச் செயல்பாடுகளாய் இருந்தது. எதிரி நாட்டு வளங்களை அழிப்பது வெற்றி பெரும் மன்னனின் இலக்காகும். மறவர், மழவர், பழையர், வம்பலர், வேட்டுவர் முதலான பாலைக்குடிகள் போர் இல்லாத காலத்தில் அதனைத் தங்களது வாழ்வியலாகக் கொண்டனர்.

**பாலைத் திணையின் உணவு முறைமை**

பாலை நிலப் பெண்கள் கரம்புகளில் எறும்புகள் சேர்த்து வைத்திருக்கும் புல்லரிசியைப் பெண்கள்


**ISBN Number: 978-81-986812-3-2**

சேகரித்தனர். இதற்கான கைத்தடி போன்ற குச்சியின் முனையில் இரும்புக் கொழு பொருத்தி அதனைக் கொண்டு எரும்புப் புற்றுகளிலிருந்து உணவை சேகரித்தனர். இதற்கு அவர்கள் பயன்படுத்திய கருவி, **“இரும்புத் தலையாத்த திருந்துகணை விழுக்கோல்” (பெரும். 92)** என்ற பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. யானைக் கறி உண்ட செய்தியினை அகநானூற்றில் காண முடிகிறது.

> **புளிதொலைத்து உண்ட பெருங்களிற்று ஒழிஊண்**
> **கலிகெழு மறவர் காழ்க்கோத்து ஒழிந்ததை**
> **ஞெலிகோற் சிறுதீ மாட்டி, ஒலிதிரைக்**
> **கடல்விளை அமிழ்தின் கணஞ்சால் உமணர்**
> **சுனைகொள் தீநீர்ச் சோற்றுஉலைக் கூட்டும்**
> **(அகம். 169: 3 -7)**

பாலை நிலத்தில் புலி கொன்று தின்று விட்டுச் சென்ற யானைத் தசையினை உமணர்களோடு சேர்ந்து நெருப்பில் வாட்டி உண்டனர். அதனை சுனை நீரில் அமைந்த சோற்று உலையில் வாடிய தசையினோடு சேர்த்து சமைத்தும் உண்டனர். பாலை என்பது அவல்நிலையின் வெளிப்பாடு எனலாம். தொல்காப்பியர் பாலைத்திணையினைக் கூறவில்லை. தன்னை நாடி வருபவர்களுக்கும் உணவினை வழங்கியுள்ளனர்.

 **ISBN Number: 978-81-986812-3-2**

**களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன**
**சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி**
**ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்**
**வறைகால் யாத்தது வயின்றொறும் பெருகுவீர்**
**(பெரும்.130 -133)**

என்ற வரிகள் வறுமையிலும் விருந்தோம்பிய தன்மையினை பறைசாற்றுகிறது. வளமை இல்லாத நிலமும், மக்களும் பாலை சார்ந்தவர்களாக அடையாளப்படுத்தப் பட்டிருக்கலாம். பாலை நிலத்தின் சூழல் துன்பம் என்பதனைக் குறியீடாகக் கொண்டு அமைகிறது. எனினும் கிடைத்தவற்றைக் கொண்டு வாழும் தகவமைப்பிற்குள் பாலை உள்ளது.

**அட்டவணை – 1 - ஐந்நில உணவுப் பொருட்கள்**

| திணை | உணவுகள் |
|---|---|
| **குறிஞ்சி** | மூங்கில்அரிசி, உடும்பு, கடமான், பன்றி இறைச்சி, நெற்கள், பலாக்கொட்டை, மோர், நெய், தேன், கிழங்கு வகைகள் |
| **முல்லை** | தினையரிசி, ஆடு, மான், முயல், வான்கோழி இறைச்சி, பால், தயிர், மோர், நெய், கும்மாயம், புளியங்கூழ். |
| **மருதம்** | செந்நெல், வெண்ணெல், கோழி, ஆமை, மான் இறைச்சி, கள், பலாப்பழம், இளநீர், வாழை, நுங்கு, வள்ளி கிழங்கு |

 ISBN Number: 978-81-986812-3-2

| | |
|---|---|
| **நெய்தல்** | கொழியலரிசிக்கூழ், மீன் உணவு, பன்றி இறைச்சி, புளித்த கள், பனை மற்றும் நெல் கள். |
| **பாலை** | வெண்சோறு, நிணச்சோறு, புல்லரிசி, பன்றி மற்றும் காட்டு மான் இறைச்சி, உடும்பு இறைச்சி |

**முடிவுரை**

பண்டைத் தமிழரின் உணவு முறைகள் இன்றும் நமது வாழ்வியலில் காணப்படுகின்றது ஐந்திணை மக்கள் நிலவியல் அடிப்படையில் வலுவான உணவியல் முறைகளைக் கட்டமைத்துள்ளனர். கலைஞர்களான பாண்சமூகம் தங்களது வறுமையினைப் போக்கிக் கொள்ள கடப்பதற்கு அரிய பாதைகளைக் கடந்து சென்றனர். அப்பயணங்களை ஆற்றுப்படை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அங்கங்கே வாழும் குடிமக்கள், வழிநடையால் வருந்தும் கலைஞர்களுக்கு உணவு கொடுத்து உபசரித்தனர். குடிமக்களிடம் உணவு பெற்றுக் உண்ட கலைஞர்கள், தங்கள் கலைகளால் அவர்களை மகிழ்வித்தனர். சில சமயங்களில் அவர்கள் தரும். பரிசுகளையும் பெற்றுக்கொண்டனர். பின்னர்த் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். இவ்வாறு அவர்கள் பெற்ற உணவுமுறை என்பது நாகரிக சமுதாயத்தின் வளர்ச்சியினுடைய அடையாளமாக உள்ளது. ஐந்திணை


**ISBN Number: 978-81-986812-3-2**

மக்கள் அனைவரும் இறைச்சியைத் தமது முக்கியமான உணவாகப் பயன்படுத்தியதை பத்துப்பாட்டு நூல்கள் சுட்டிச் செல்கின்றன. உணவுப் பொருட்களை அடைவதில் எவ்விதமான தர்ம நியாயங்கள் அங்கு காணப்படவில்லை. திணை சார்ந்த காலம் என்பது மக்கள் உணவு வாயிலாக சமுதாய உணர்ச்சியினைப் பெறத் தொடங்கிய காலம் எனலாம். உணவுப்பொருட்களை உண்டாக்கி உண்ணும் முறைகள் மாறுவதன் மூலம் உணவுடன், சுவையும் நாகரீகமும் வளரத் தொடங்கின. இவ்வாறு திணையின் நிலவியல் சார்ந்த உணவு நிலைகளையும், மாற்றங்களையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிந்தது.

**துணைநூற்பட்டியல்**

[1] சுப்ரமணியன். *சங்ககாலச் சமுதாயம்.* நியூ செஞ்சுரி புக் கவுஸ், சென்னை. 1982, ப.62.

[2] அ. கா. பெருமாள். *உணவுப் பண்பாடு.* நியூ செஞ்சுரி புக் கவுஸ், சென்னை. 2002, ப. 4

[3] ஆ. மணி. *தமிழர் உணவுகள்.* தமிழன்னை ஆய்வகம், சென்னை, 2003, ப. 24.

[4] பக்தவத்சலபாரதி. *சங்க காலத் தமிழர் உணவு.* காலச்சுவடு பதிப்பகம், 2021, ப. 32.

 **ISBN Number: 978-81-986812-3-2**

[5] பக்தவத்சலபாரதி. *சங்க காலத் தமிழர் உணவு.* காலச்சுவடு பதிப்பகம், 2021, ப. 49.

[6] பக்தவத்சலபாரதி. *சங்க காலத் தமிழர் உணவு.* காலச்சுவடு பதிப்பகம், 2021, ப. 29.

[7] தொல்காப்பியர். *தொல்காப்பியம்.* மணிவாசகர் பதிப்பகம், 2005.

[8] *ச. வே.சுப்பிரமணியன்.* (உ. ஆ.) சங்க இலக்கியம். மணிவாசகர் பதிப்பகம், 2000.

 **ISBN Number: 978-81-986812-3-2**